விலை ரூபா: 15:00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 29 வெள்ளிக்கிழமை (14.08.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 238




# அரசியல் கட்சித் திருத்தச் சட்டத்தில் சர்ச்சைக்குரியவற்றை நீக்க இணக்கம்

(கொழும்பு)

இலங்கையில் அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பது தொடர்பில் நடைமுறையிலுள்ள சட்டத்தில் சர்ச்சைக்குரிய சரத்துக்களை நீக்கி விடுவதற்கு அரசாங்கமும் அனைத்துக் கட்சிகளும் நாடாளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டமொன்றில் இணக்கம் தெரிவித்துள்ளன. (13ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி முறைமையை மாற்ற வலியுறுத்தி ஜே.வி.பி. கடிதம்!

(கொழும்பு)

ஜனாதிபதியின் முதலாவது பதவிக்காலம் முடிபடைவதற்கு முன்பாகவே எதிர்வரும் ஜனவரிமாதத்தில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசு மேற்கொண்டுவரும் முயற்சிக்கு ஜே.வி.பி. கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. புதிய தேர்தலுக்குப் பதிலாக ஜனாதிபதி முறையையே மாற்றியமைக்க வேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

மற்றொரு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு மகிந்த ராஜபக்ஷவுக்கு எந்த உரிமையும் இல்லை எனத் தெரிவித்து ஜே.வி.பி. பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, கடந்த புதன்கிழமை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது ஜே.வி.பியுடன் மகிந்த ராஜபக்ஷ செய்து கொண்ட புரிந் துணர்வு ஒப்பந்தத்தின் சரத்து 7ஐ மேற்கோள்காட்டியுள்ள ரில்வின்சில்வா, (13ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி தெற்கு உயர் பாதுகாப்பு வலயப்பிரதேசம் மக்களிடம் இன்று கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி தெற்கு உயர்பாதுகாப்பு வலயப்பிரதேசம் இன்று மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது. மறவன்புலோ J/298, கைதடி நாவற்குழி J/297, மற்றும் தனங்களப்பு J/ 299 ஆகிய பிரதேசங்களை மீளவும் அப்பகுதி மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியள வில் கைதடி நாவற்குழி முருகமூர்த்தி ஆலய முன்றலில் (02ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் மகன் நாமல் நாளை யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் இளைஞர்களுக்கான எதிர்காலம் அமைப்பின் இயக்குநருமான நாமல் ராஜபக்ஷ நாளை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள 5 கல்வி வலயகளிலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான கருத்தரங்கை தமது அமைப்பு ஊடாக நடத்துவதற்காகவே அவர் இங்கு வரவுள்ளார்.

இக்கருத்தரங்கு நாளையும் நாளை மறுதினமும் சகல கல்வி வலயங்களிலுமுள்ள தலா ஒரு பாடசாலையில் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இக்கருத்தரங்கு தொடர்பில் ஆரம்பப்பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் (13ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் பாரிய புதைகுழிகள்; செய்ம்மதிப் படங்கள் மூலம் அம்பலம்

## சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் இறுதிகட்ட யுத்தம் இடம் பெற்றதன் பின்னர் தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட செய்ம்மதிப் படங்கள் மூலம் பாரிய மனித புதைகுழிகள் இருப்பதற்கான சாட்சியங்கள் உள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையானது அரசாங்கம் பாரிய ஆயுதங்களை பொது மக்களுக்கு எதிராக பயன் படுத்தவில்லை என்பதற்கு சவாலாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்ம்மதிப் படங்களின்படி மூன்று பாரிய புதை குழிகளும் அதனை தவிர மொத்தமாக ஆயிரத்து 346 புதைகுழிகள் காணப்படுவதாக மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி செய்ம்மதி படங்கள் எடுக்கப்பட்டபோது அங்கு புதைகுழிகள் காணப்படவில்லை.

எனினும் மே மாதம் 24 ஆம் திகதி அளவில் சுமார் 342 புதை குழி கள் காணப்பட்டதாக லண்டனை தலைமையக மாக கொண்ட மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

எனினும் இந்த குழிகளில் பொதுமக்களா அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளா புதைக்கப் பட்டிருக்கிறார்கள்? என அந்த சபை தெரிவிக்கவில்லை (13ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பிரதிநிதியாக கோஹன நியமனம்

(கொழும்பு)

வெளிவிவகாரத்துறை செயலாளர் பாலித கோஹன அடுத்த மாத தொடக்கத்தில் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி பதவியைப் பொறுப்பு ஏற்றுக் கொள்ள உள்ளார்.

தற்போதைய பிரதிநிதியான எச்.எம்.எஸ். பாலியக்காரவிடம் இருந்து செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி அவர் நியூயோர்க்கில் தனது பதவியைப் பொறுப்பு ஏற்பார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத் தொடரில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றுவதற்கு சரியாக ஒரு வாரம் (13ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பிலிருந்து ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

நான்கு படகு இயந்திரங்கள் உட்பட பெருந்தொகையான ஆயுதங்களை பாதுகாப்பு படையினர் மீட்டெடுத்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு, அம்பகாமம் பிரதேசங்களில் இராணுவத்தின் விசேட அதிரடிப் படைப்பிரி (13ஆம் பக்கம் பார்க்க)

# புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துடன் றொபேர்ட் ஓ பிளேக் சந்திப்பு



## இலங்கைத்தமிழர் குறித்து விரிவாக ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையின் மனிதாபிமானச் சிக்கல்கள் மற்றும் அரசியல் கருத்து இணக்கம் என்பன குறித்து புலம்பெயர் தமிழர் பிரதிநிதிகளுடன் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள துணை அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் சந்தித்துப் பேசியுள்ளார்.

இச்சந்திப்பின் போது இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு விவகார அதிகாரி ஜேம்ஸ் மூரேயும் உடன் இருந்தார் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கின்றது.

புலம்பெயர் தமிழர்கள் சார்பில் அமெரிக்காவில் உள்ள தமிழ் அமைப்புகளைச் சேர்ந்த 16 பிரதிநிதிகள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இச்சந்திப்பின்போது, புலம்பெயர் தமிழர்களின் கவலைகளையும் நோக்கங்கள் குறித்தும், மனித உரிமை சிக்கல்கள் தொடர்பில் அமெரிக்கா எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றியும் பகிர்ந்து கொள்வதற்கு கிடைத்த இந்த சந்தர்ப்பத்திற்காக (13ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

கொழும்பு பிரபல ஆசிரியர் தயாரித்த 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்.

குறிப்பு:- மாதிரி வினாத்தாள் தொடர்ந்து வெளிவரும்.

# கைதான இரு இளைஞர்கள் சடலமாக மீட்பு
# ஆத்திரமடைந்த மக்கள் பொலிஸார் மீது தாக்குதல்

(கொழும்பு)

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரு சிங்கள இளைஞர்கள் சுட்டு கொல்லப்பட்டு அவர்களின் உடல்கள் வீதியோரத்தில் வீசப் பட்டதையடுத்து ஆத்திரமடைந்த பொது மக்கள் பொலிஸ் நிலையத்தை அடித்து நொருக்கியதுடன் புகைவண்டி போக்குவரத் தையும் நிறுத்தியுள்ளனர்.

தலைநகர் கொழும்பின் தென்பகுதியில் உள்ள ஒரு புறநகர் பகுதியான அங்குரான யிலேயே இச்சம்பவம் நேற்று வியாழக்கிழ மை காலை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது;

தினேஷ் துரங்க பெர்னான்டோ, தனுஷ் கா உதயா ஆகிய இரு இளைஞர்களும் நேற்று முன்தினம் மாலை அங்குரான பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் நின்றபோது பொலிஸா ரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த இருவரது பெற்றோரும் சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் கேட்டபோது நேற்று காலையில் விடுவிப்பதாக அவர்கள் தெரிவித் துள்ளனர். இந்நிலையில் நேற்று அதிகாலை அங்குரான பொலிஸ்நிலையத்திற்கு பெற்றோர் கள் சென்றபோது கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் கல்கிசைப் பொலிஸ் நிலை யத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டது.


இதனையடுத்து அவர்கள் கல்கிசையை நோக்கி சென்றுகொண்டிருந்த போது கைது செய்யப்பட்ட இருவரினது உடல்களும் இரத் மலானை கூட்டுறவுச் சங்க விற்பனை நிலை யத்திற்கு அருகிலும் லுனாவ பாலத்திற்கு அரு கிலும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து ஆத்திரமடைந்த மக்கள் புகையிரத சேவையைத் தடுத்ததுடன் பொலிஸ் நிலையத்தையும் தாக்கினர். கற்கள், தடிகளுடன் வந்த ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் பொலிஸ் நிலையத்தை சேதப்படுத்தினர். மேலதிகமாக தரைப்படையினரும் பொலிஸா ரும் அழைக்கப்பட்டு அமைதி நிலைநாட்டப் பட்ட போதிலும் பதற்றம் தொடர்கின்றது (ச-5)

# இலங்கை வங்கியின் விசேட வங்கிச் சேவை நாளை இடம்பெறாது

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் யாழ். அதிமேற்தரக் கிளையின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கி லான திருத்த வேலைகள் இடம்பெற்று வரு வதால் நாளை 15ஆம் திகதி சனிக்கிழமை வாடிக்கையாளர்களுக்கான விசேட வங்கிச் சேவை இடம்பெறமாட்டாது என இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் சிவரட்ணம் அறிவித்துள்ளார். (ச)





மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி யில் புதிதாக அமைக்கப்பட்ட விஞ் ஞான ஆய்வு கூடத் திறப்பு விழா வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மங்கல விளக்கேற்று வதையும் அமைச்சர் மற்றும் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் ஆய்வு கூடத்தை திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

# சாவகச்சேரி நகரசபை மைதானமும் இந்து மயானமும் இன்று முதல் பாவனைக்கு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, நகர சபைக்குரிய விளை யாட்டு மைதானம் மற்றும் இந்து மயானம் என்பன இன்று முதல் பொது மக்களின் பாவ னைக்காக திறந்து விடப்படுவதாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்

பாதுகாப்புத் தேவைகள் காரணமாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடு களை பொதுமக்கள் நலன் கருதி அகற்றுவது தொடர்பில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளு க்கு இணங்க, பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் நடந்த கலந்துரையாடலின் பின்னர் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். குடாநாட்டின் பல் வேறு துறைகள் சார்ந்த அபிவிருத்தி மேம் பாடுகள் தொடர்பான கலந்துரையாடலின் பின்னர், அமைச்சரும், ஆளுநரும் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் அபி விருத்தி மேம்பாட்டு நடவடிக்கைகளை நேற்று முன்தினமும் நேற்றும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். (ச)


தரம்: 4 முதல் 10 வரை
3ஆம் தவணை புதிய அனுமதிகள்
வெற்றித்தேர்வு பரீட்சையோடு 2008 அகில இலங்கை ரீதியாக சாதனை படைத்த எமது ஆசிரியர் K.தவயோகராஜா மற்றும் பிரபல ஆசிரியர் K.K.கைலநாதன் ஆகியோரின் நேரடி வழிகாட்டலில் 2010 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கு விசேட வகுப்புகள் 23.08.2009 ஆரம்பம்.
GR:6&7 ENGLISH MEDIUM
இன்று முதல் வழங்கப்படுகின்றன.
உங்கள் பிள்ளை தரம்:4இல் கற்ற படிமுறைகளோடு பல்கலைக் கழகம் செல்ல, ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் கல்வியைத் தொடர, உங்கள் கற்பனை நிஜமாக இன்றே இணையுங்கள்
சயன்ஸ் அக்கடமி. நல்லூர்.அரியாலை


# உயர் பாது...

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் நா.சிவதிருச்செந்துநாதர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

• நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச் சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, சாவகச்சேரி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கமநல உதவி ஆணையாளர் பற்றிக் நிறஞ்சன், சாவகச் சேரி பிரதேச செயலர் எஸ். சிவராஜலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். எனவே இந்நிகழ்வுக்கு இப்பகுதியில் நெற் செய்கையில் ஈடு படும் விவசாயி களையும் வரு கை தருமாறும் இந் நிகழ்விற்கு நுணாவில் கொல்லங்கராய் வீதியூடாகவும், கேரதீவு வீதி ஊடாகவும் வரு கை தரலாம் என் றும் இந் நிகழ் வுக்கு வருகை தந்து தத்தமது பகுதிகளுக்கு செல்லலாம் எனவும் தென் மராட்சி தெற்கு மீளக்குடியமர்வோர் சங்கம் அறிவித் துள்ளது.

மேலும் இப் பகுதி மக்களின் வசதி கருதி நாவற் குழி-கேரதீவு வீதி ஊடாகவும் தனங் களப்பு சந்தி-சாவ கச்சேரி வரை யிலும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சேவை யை நடத்து வதற்கு ஒழுங்கு கள் மேற்கொள் ளப் பட்டு வருவ தாகவும் சங்கச் செயலாளர் தி. தங் கவேலு தெரிவித் துள்ளார். (ச-3)


வெளிவந்து விட்டது-
O/L சுகாதாரம் உடற்கல்வி வினா விடை
ஸபான் எழுதிய தரம்:5 புலமைப்பரிசில் இறுதி வழிகாட்டி
பூபாலசிங்கம், அன்னை, துர்க்கா, மொடேன்

தரம்:5 வெற்றித்தேர்வு செயலமர்வு
கோப்பாய் ஆசிரிய கலாசாலையில்
புதிய நேர அட்டவணை
15.08.2009 பி.ப.2மணி யாழ் கல்வி வலயம்
16.08.2009 மு.ப.8.30மணி வடமராட்சி, தீவகம்
16.08.2009 பி.ப.2மணி தென்மராட்சி, வலிகாமம்
மேலதிக தகவலுக்கு: 021229016. 0602217191. 0212263815










ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

ஸ்ரீ அம்மா பகவான் ஜென்ம தின விழா

அன்பை வளர்க்கும் அற்புத பெரும் விழா, விசேட அஷ்டலட்சுமி அனுக்கிரக கலச பூஜை, நாட்டில் சுபீட்சமும் அமைதியும் நிலவுவதற்கான விசேட பிரார்த் தனையும் பின்வரும் இடங்களில் நடைபெறும்.

15.08.2009- நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 3.30 மணிவரை.

15.08.2009- திருமதி சு.வேதநாயகி ஜீ இல்லத்தில் (ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். T.P :-0212222314) பிற்பகல் 3.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை.

15.08.2009- கி.பத்மநாதன் ஜீ (123, கே.கே.எஸ். வீதி, பூநாறி மரத்தடி. T.P :-0774248899) பிற்பகல் 3.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை.

15.08.2009- திருமதி பு.ஜெகதீஸ்வர சர்மா ஜீ (சக்களா வத்தை வைரவர் கோவிலடி, நவிண்டில் கரவெட்டி. T.P :-0778715106)

16.08.2009- என்.இராஜகோபால் ஜீ (புதுத்தோட்டம், துன்னாலை மேற்கு. T.P :-060 2218293)

*குறிப்பு :- 22.08.2009- யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை யில் வெகு சிறப்பாக ஸ்ரீ பத்மாவதி அம்மாவின் ஜென்ம தின விழா நடைபெறவுள்ளது. இது பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.*

T.P.:-021 222 2935

ஏகத்துவ நிலையம்
யாழ். கல்கி ஆன்மீக மையம்,
மணியர்பதி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(C-3020)

# இன்று ஒரு தகவல்

## வாழ்வின் இயல்பு

கிரேக்க நாட்டில் ஒரு ராஜா இருந்தார். அவர் வித்தியாசமான குணம் படைத்தவர்.

அவரிடம் ஒரு கட்டில் இருந்தது. அது ஓர் அழகான கட்டில். தங்கத்தாலானது. விலையுயர்ந்த வைரமெல்லாம் பதித்து வைத்திருந்தார்கள். அப்படியான கட்டில் வேறுயாரிடமும் கிடையாது. அப்பேற்பட்ட அபூர்வமான கட்டில் அது.

அந்த ராஜா தனக்கென சில கொள்கைகளை வைத்திருந்தார்.

அரண்மனைக்கு யாராவது முக்கிய விருந்தினர்கள் வந்தால் அவர்களை அந்தக் கட்டிலில் படுக்க வைப்பார். ஆனால் ஒரு விடயம்.

வருகை தரும் விருந்தினரின் உயரம் அந்தக் கட்டிலின் நீளத்துக்குச் சமனாக இருக்க வேண்டும். படுத்தால், கூடக்குறைய இருக்கக்கூடாது. அப்படி ஒரு ஒழுங்கு முறையை எதிர்பார்ப்பவர்.

யாராவது ஒரு விருந்தினர் வந்தால் அன்றிரவே அந்தக் கட்டிலில் படுக்க அனுமதி கொடுப்பார்.

வரும் விருந்தினர் அந்தக் கட்டிலை விட நீளமாக இருந்தார் என்று வைத்துக் கொள்ளுங்கள். கட்டிலுக்குத் தகுந்தாற் போல் காலை வெட்டி விடச் சொல்வார்.

ஏனென்றால் அந்தக் கட்டில் விலையுயர்ந்தது. அதை மாற்ற முடியாது. அதனால் கட்டிலுக்குத் தகுந்தாற் போல் ஆளை மாற்றிவிடுவார்.

அங்கே கட்டில் தான் முக்கியம். மனிதன் முக்கியமல்ல. அப்படித்தான் பல சமயங்களில் நமக்கு வாழ்வு முக்கியமாகத் தெரிவதில்லை. சட்ட திட்டங்கள் தான் முக்கியமாகத் தெரிகிறது.

பொதுவாக ஒரு அளவை வைத்துத்தான் கட்டிலை தயார் செய்ய முடியும்.

ஒரு சராசரி மனிதனின் அளவு அது. ஆனால் சராசரி உயரமுள்ள மனிதன் என்பது கணக்கில் வேண்டுமானால் இருக்கலாம். நடைமுறையில் இருக்க முடியாது. அது கணக்கில் ஏற்பட்ட ஒரு கற்பனை அளவு. அந்தக் கற்பனை அளவுக்கு நூறு சதவீதம் சரியாக ஒரு விருந்தாளி வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியாக இருக்குமா?

அந்தக் கட்டிலை விட நீளம் குறைவான ஒரு விருந்தாளி வந்து விட்டார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுதும் அந்த ராஜா சும்மா இருக்கமாட்டார். அதற்கென்றே அரண்மனையில் சில பலசாலிகளை வைத்திருக்கிறார். அவர்களை கூட்டிக் கொண்டு வந்து விருந்தாளியைக் காட்டி விடுவார்.

தலைப்பக்கம் நால்வர் – கால்பக்கம் நால்வர் அவரைப் பிடித்து பலம் கொண்ட மட்டும் இழுக்கச் சொல்லுவார். கட்டிலின் அளவுக்கு சரியாக பொருந்தும் அளவு நீட்டச் சொல்வார். உடம்பு என்ன கம்பியா... தட்டி நீட்டுவதற்கு?

வரும் விருந்தினர் நல்ல முறையில் படுத்து ஆனந்தப்பட வேண்டும் என்று தான் அந்த ராஜா நினைக்கிறார். ஆனால் கட்டிலுக்குத் தகுந்தாற் போல் அவருடைய நீளம் இருக்க வேண்டும் என்று நினைப்பதால் எவ்வளவு இடைஞ்சல்!

இது அரசனின் தவறில்லை. ஒழுங்கு முறையின் தவறு என்கிறார் ஓஷோ என்ற பெரியவர்.

வாழ்க்கையை நெறிப்படுத்துவது என்பது வேறு! கட்டுப்படுத்துவதென்பது வேறு! ஒழுங்கு முறையைத் திணிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு பலபேர் வாழ்வையே இழந்து விடுகிறார்கள்.

வாழ்வின் இயல்பு ஆனந்தம்... மகிழ்ச்சி! அந்த மகிழ்வை அடைய வேண்டுமானால் திறந்த மனதுடன் செயல்பட வேண்டும். இது தெரியாததால் நம்மில் பலர் வாழ்க்கையின் முக்கியமான சில பகுதிகளை இழந்து விடுகிறோம். நம்மில் சிலர் வேறுமாதிரி...

ஒரு ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் நடந்து முடிந்தது. அதன் பின்னர் நர்ஸ் அவசரமாக ஓடிவந்து

''டாக்டர் இந்த நோயாளிக்கு காலில்தான் கட்டி. ஆனால் நீங்கள் மூளையில் கட்டி என்று நினைத்து மூளையில் ஆபரேஷன் செய்து விட்டீர்கள். மூளையில் ஆபரேஷன் செய்ய வேண்டிய நோயாளி 15 ஆம் நம்பர் கட்டிலில் இருக்கிறார்'' என்றார்.

டாக்டர் பார்த்தார். "பரவாயில்லை... அதனால் என்ன... கட்டிலை மாற்றிவிட்டால் போச்சு! இவரைக் கொண்டு போய் 15 ஆம் நம்பர் கட்டிலில் போட்டுவிடு சரியாகிவிடும்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நிர்வாக சேவையில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றவர்களாலேயே சிறந்த சேவையாற்ற முடியும்

## அமைச்சர் சரத் அமுனுகம

(கொழும்பு)

நிர்வாக சேவையில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றவர்களாலேயே சிறந்த முறையில் சேவையாற்ற முடியும். அப்போதுதான் அதன் பலாபலனை மக்களால் அனுபவிக்க இயலும். இந்தியா அதற்கு ஓர் முன் மாதிரியான நாடு. எம்மவர்களும் அதன் முன்மாதிரியைப் பின்பற்றி நடக்க வேண்டும் என பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அமைச்சர் தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில், பொது நிர்வாக சேவையில் பல வெற்றிடங்கள் அவ்வப்போது ஏற்படுவது உண்டு. அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்களென வெற்றிடங்கள் ஏற்படுவது உண்டு.

எனினும், எனது அமைச்சினூடாக நல்ல தராதரம் உடையோரையே நேர்முகப் பரீட்சை நடத்தி நாம் தெரிவு செய்கின்றோம். உயர்ந்த பட்ச சேவையை வழங்குவதே எமது நோக்கமாகும்.

நிர்வாக சேவையை எடுத்துக் கொண்டால் ஓய்வூதியம், சம்பள நிலுவை தொடர்பில் பற்பல பிரச்சினைகளும் எழுவது சகஜம்.

எனினும், எனது30 வருட கால அரச உத்தியோகம் பார்த்த அனுபவித்தினைக் கொண்டு அவற்றைத் தீர்த்து வைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குகின்றேன்.

எனது செயலாளர் ஊடாக ஓர் குழுவினை அமைத்து, நிர்வாக சேவையில் எழும் பிரச்சினைகளுக்குத் தாமதியாமல் துரித கதியில் தீர்வினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். 131 தகுதியானவர்களை புதிதாக இத்துறையில் பயிற்சியளித்து சேவையில் இணைக்கவுள்ளோம் என்று தெரிவித்தார். (ஓ-6)

## இலங்கை கனிஷ்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி

(யாழ்ப்பாணம்)

6 ஆவது சர்வதேச கனிஷ்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிக்கான தெரிவுப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 11.30 மணி வரை யாழ். பல்கலைக்கழக பௌதீகவியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த மாணவர்கள் நேரடியாக பரீட்சை மண்டபத்திற்கு காலை 8.30 மணியளவில் வந்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொண்டு பரீட்சைக்குத் தோற்றுமாறு இப் போட்டிக்கான வட மாகாண இணைப்பாளர் கலாநிதி நா. சிவயோகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலதிக தகவல்களை யாழ். பல்கலைக்கழக பொதிகவியற்றுறை தலைவர் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமோ பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*தொலை பேசி இலக்கம்.*

077 666 4766 (ஓ)

## அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பாக ஜனாதிபதி ஆராய்வு

### லலித் வீரதுங்க தெரிவிப்பு

இலங்கையில் தற்போது பதவி வகித்து வரும் அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆராய்ந்து வருவதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி விரைவில் மேற்கொள்வார் எனவும் தற்போதைய அமைச்சர்களின் எண்ணிக்கை மிகவும் உயர்வாக காணப்படுவதாக ஜனாதிபதி கருதுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சி தாவல்களில் ஈடுபட்ட அரசியல் வாதிகளை திருப்திப்படுத்தும் நோக்கில் அதிகளவான அமைச்சுப்பதவிகள் உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையில் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை 128 என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## இராசி பலன்

*14.08.2009*
*(ஆடி 29, வெள்ளிக்கிழமை)*
*அட்டமி முற்பகல் 8.02 மணிவரை*
*கார்த்திகை முன்னிரவு 8.00 மணிவரை*
*இராகுகாலம் 10.35-12.05 மணிவரை*
*சுபநேரம் 6.05-7.35 மணிவரை*
*கார்த்திகை விரதம் , அட்டமி நவமி*

| | |
|---|---|
| மேடம் | மனோ சங்கடம், கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், போசன சுகக்குறைவு. |
| இடபம் | வெகுமானம், போசன சுகம், தெய்வ தரிசனம், முயற்சி கை கூடும். |
| மிதுனம் | சோம்பல் நிலை, காரிய தாமதம், பிறருக்கு உதவுதல், தீர்பயணம். |
| கடகம் | தெய்வ தரிசனம், தனதானிய சேர்க்கை, மனமகிழ்ச்சி, நண்பர்கள் வருகை. |
| சிங்கம் | இஷ்ட சித்தி, பெரியோரால் மதிக்கப்படல், தூர தேசச் செய்தி, ஆரோக்கிய நிலை. |
| கன்னி | உத்தியோக பங்கம், கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, பயணம். |
| துலாம் | பொருள் விரயம், முழங்கால் வலி, காரிய தாமதம், வீண்பகை. |
| விருச்சிகம் | தெய்வ தரிசனம், சென்ற இடத்தில் செல்வாக்கு, தேகநலன், போசன சுகம். |
| தனுசு | தடைப்பட்ட காரியம் கைகூடும், சுவாரஸ்யம், நல்ல தகவல், தேகநலன். |
| மகரம் | அஜீரணக் கோளாறு, மனச்சஞ்சலம், காரிய இடையூறு, தன விரயம். |
| கும்பம் | தன்னம்பிக்கைக்குறைவு, ரோக நிலை, கடினமுயற்சி, சுபசெலவு. |
| மீனம் | மனோ தைரியம், இஷ்ட சித்தி, நற்கீர்த்தி, தெய்வ தரிசனம். |

வளவன்

## விண்ணப்பம் கோரல்

### ஆசிரிய கல்வி பாட நெறிக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்தல்

தேசிய கல்வி நிறுவகத்தினூடாக பிராந்திய நிலையங்களில் வார இறுதி நாட்களில் நடத்தப்படும் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான தகைமையுடைய ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 8''×12'' (A4) அளவிலான தாளின் இருபக்கமும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தயாரித்து வர்த்தமானியில் கொடுக்கப்பட்டவாறு மாதிரி கடித உறையைப் பயன்படுத்தி *பணிப்பாளர், ஆசிரியர் கல்வி நிர்வாகம், கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல* என்ற முகவரிக்கு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களை 14.08.2009 ஆம் திகதிய வர்த்தமானியிலோ அன்றி வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம் (ச-5).

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 50 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 90-100 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 60 |
| தக்காளி | 40 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 60 |
| கோவா | 140 | 160 | -- |
| கரட் | 100 | 120 | 80 |
| பூசணி | 30 | 50 | 30 |
| புடோல் | 20 | 20 | 20 |
| வாழைக்காய் | 30 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 45 | 55 | 40-50 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 30 | 45 | 45 |
| வெண்டிக்காய் | 20 | 40 | 20 |
| கரணைக் கிழங்கு | 40 | 60 | -- |
| பயிற்றங்காய் | 40 | 60 | 30 |
| லீக்ஸ் | 50 | 70 | 60 |
| பீற்றூட் | 40 | 60 | 40 |
| கறிமிளகாய் | 40 | 60 | 40 |
| முருங்கைக்காய் | 140 | 160 | 160 |
| கீரை – 1 பிடி | 20 | 25 | -- |
| தேசிக்காய் | 30 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |

## ஆன்மீக நிகழ்வு

(சாவகச்சேரி)

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்பட்டு வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் இன்று காலை 10.30 மணிக்கு சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஓ)

## நாட்டிய இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு இந்திய கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் வீரகேசரிப் பத்திரிகை வழங்கும் பாட்டும் பரதமும் நாட்டிய இசை நிகழ்ச்சி இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு நல்லூர் சாதனா தமிழ் கலவன் பாடசாலை விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நாட்டிய இசை நிகழ்ச்சியை பாரத ரத்னா ஸ்ரீமதி ரமா வைத்தியநாதன் குழுவினர் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## புலமைப்பரிசில் பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

(அல்வாய்)

இம்மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு வடமராட்சி கல்வி வலய பரீட்சை நிலையங்களில் கடமையாற்றவுள்ள மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள், இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தின் போது கல்வியமைச்சின் பரீட்சைப்பகுதியிலிருந்து சமூகமளிக்கும் பிரதி பரீட்சை ஆணையாளர்கள் அறிவுறுத்தல்களை வழங்கவுள்ளனர்.

ஆதலால் மேற்படி கடமையில் ஈடுபடும் அனைவரும் தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஓ-6-19)

### யாழ்.செய்திகள்

## டனிஸ் அகதிகள் கவுன்சிலால் உணவுப் பொருட்கள் விநியோகம்

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த புற்றுநோய் மற்றும் தொழுநோய் ஆகியவற்றுக்கான கொடுப்பனவை பெறும் பயனாளிகளுக்கு டனிஸ் அகதிகள் கவுன்சிலால் உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

உரியவர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி கொடுப்பனவு பெறும் அட்டையுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவிற்கு பிற்பகல் 1 மணிக்கு வருகைதந்து உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலாளர் செ. ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (ஓ)

## நல்லூர் மஹோற்சவ கால நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் சமயச் சொற்பொழிவுகளும் கலைநிகழ்வுகளும் நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை 'ஆறுமுகமான பொருள்' என்னும் விடயம் பற்றி சைவப்புலர், ஆசிரியர் கா. கமலநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து விசேட நிகழ்வாக திருமதி புஸ்பமலர் யோகநாதனின் நெறிப்படுத்தலில் பண்ணிசைக் கச்சேரியும் மானிப்பாய் மருதடி விநாயகர், யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, வரணிசிட்டி வேரம் கண்ணகை அம்மன் ஆகிய அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுளும் இடம்பெறவுள்ளன.

✪ ✪ ✪

இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிமுதல் 7.30 மணி வரை செல்வி பரமேஸ்வரி கணேசனின் பாட்டு இடம்பெறவுள்ளது.

இதில் அணி செய் கலைஞர்களாக வயலின் கே. குருபரன், மிருதங்கம் வி. ரமணா, கடம் எஸ். சிவசிவா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

✪ ✪ ✪

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயத்தில் கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தி வரும் "கம்பராமாயணம்" இசைச் சொற்பொழிவில் இன்று வெள்ளிக்கிழமை 6 மணிக்கு 'வாலி மோட்சம்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ)

## பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவம்

(பொன்னாலை)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறும் மஹோற்சவத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும், செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு மஞ்சத்திருவிழாவும், செப்டெம்பர் 7 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 1008 சங்காபிஷேகம், சயன உற்சவம் போன்றனவும், 10 ஆம் திகதி வியாழன் மாலை 7 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் நடைபெறும்.

11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 1008 சங்காபிஷேகம், முற்பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை, நண்பகல் 12 மணிக்கு தேரில் எழுந்தருளல், பகல் 1.30 மணி உறியடி உற்சவம், இரவு 10 மணி கிருஷ்ண ஜெயந்தி, இரவு 12 மணி அபிஷேகம், பூஜை, உற்சவம் தாலாட்டு பஜனை என்பன இடம்பெறும்.

மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு சுவாமி திருவடிநிலை தீர்த்தக்கரைக்கு எழுந்தருளிச் சென்று 11 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும். அன்று மாலை 6 மணிக்கு கொடியிறக்க வைபவமும், செப்ரெம்பர் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 1008 சங்காபிஷேகமும், ஆஞ்சநேயர் பொங்கலும் இடம்பெறும். (ஓ-49)

## பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழான நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் நல்லூர் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட யாழ் மாநகர சபையினால் நிர்வகிக்கப்படும் பின்வரும் வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் நல்லூர் சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள மாநகரசபை முன்பள்ளிக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் விநியோகத்திற்கு ரூ.35 ஆயிரமும், நல்லூர் ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்திற்கான ஒலிபெருக்கி சாதனங்கள் மற்றும் துணைக்கருவிகள் விநியோகத்திற்கு ரூபா. 50 ஆயிரமும், நந்தாவில் ஒழுங்கை புனரமைப்பிற்கு ரூபா ஒரு இலட்சமும், நல்லூர் முருகன் சனசமூக நிலைய சிறுவர் பூங்காவிற்குத் தேவையான உபகரண கொள்வனவுக்கு ரூபா 50 ஆயிரமும், அரியாலை சனசமூக நிலையத்திற்கான புத்தக விநியோகத்திற்கு ரூபா 50 ஆயிரமும், அரசடி 2 ஆம் 5 ஆம் ஒழுங்கை திருத்த வேலைகளுக்கு 6 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட சனசமூக நிலையங்கள் தாங்களுக்கான வேலைத்திட்டங்கள் தொடர்பான கோரிக்கைகளை யாழ். மாநகரசபை ஆணையாளருக்கு எழுத்துமூலம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஓ-6-30)

## மண்டலாபிஷேகப் பெருவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் வட பத்திரகாளி அம்பாளின் மண்டலாபிஷேகப் பூர்த்தி பெருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த யூலை மாதம் 4 ஆம் திகதி அன்று ஆலயத்தில் புதிதாக பிரதிஷ்டை செய்யப் பெற்ற வடபத்திரகாளி அம்பாளுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்று வருகின்றது.

மண்டலாபிஷேக பூர்த்தி அன்று வட பத்திரகாளி அம்பாளுக்கு கலச பால் அபிஷேகமும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. (ஓ)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்த வண்ணார் பண்ணை நாவற்குழி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இதில் ஆனைக்கோட்டை, அறிவொளி சனசமூக நிலையம், செழியன் வீதி, ஓட்டுமடம் சனசமூக நிலையம், மானிப்பாய்வீதி, ஒஸ்மானியாக் கல்லூரி வீதி ஆகிய இடங்களில் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளும்படி யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (ஓ-4)

## வீதியோரங்களில் இரும்பு குவியல்கள் போக்குவரத்துக்கு பெரும் சிரமம்

(பொன்னாலை)

யாழ் - மானிப்பாய் வீதியில் பெரிய முஹைதீன் பள்ளிவாசலுக்குச் சமீபமாக வீதியின் இருமருங்கிலும் பெருமளவில் குவிக்கப்பட்டிருக்கும் இரும்புகள் போக்குவரத்துக்கு தடையாக இருப்பதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

வியாபார நோக்கத்துக்காக பெருமளவில் கொள்வனவு செய்யப்பட்ட பழைய இரும்புகளே வீதியின் இருமருங்கிலும் இவ்வாறு குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

குறித்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தப்படாது மாதக்கணக்கில் கிடக்கும் இவ் இரும்புக் குவியல்களில் போக்குவரத்துக்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக குறிப்பிடப்படுகிறது.

அத்துடன் எதிரெதிரே வரும் இரு வாகனங்கள் விலத்திச் செல்ல முடியாமல் அசௌகரியப்படுவதை அவதானிக்க முடிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே குறித்த இரும்புகளை அகற்றி சீரான போக்குவரத்துக்கு வழி வகுக்க சம்பந்தப்பட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொதுமக்கள் கோரிக்கை விடுகின்றனர். (ஓ-49)



நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு இலங்கை வங்கியின் அனுசரணையுடன் யாழ். போஷாக்கு சமூகம் மற்றும் மருத்துவ பீட மாணவர்கள் இணைந்து நடத்தும் போஷாக்கு விழிப்புணர்வு கண்காட்சி நல்லூர் முருகன் ஆலய மேற்கு வீதியில் நடைபெற்று வருகிறது. இந்நிகழ்வில் இளைஞர் ஒருவர் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்படுவதையும், பார்வையாளர்கள் கண்காட்சியை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# தென்மாகாண சபைத் தேர்தல் களத்தில் நடிகை அனார்கலி

(கொழும்பு)

தென் மாகாணசபைத் தேர்தலில் சிங்களத் திரைப்பட நடிகையான அகர்சாய அனா க்கலி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட வுள்ளார்.

வேட்பாளர்களுக்காக நடத்தப்பட்ட நேர் முகப்பரீட்சைகளில் நடிகை அனார்க்கலி கலந்துகொண்டதாக முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

மங்கள சமரவீர எம்.பி அமைச்சராக பதவி வகித்த காலத்தில் அவரது பிரத்தியேக செயலாளராக நடிகை அனார்க்கலி கடமை புரிந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# மதவாச்சியில் இடம்பெற்ற விபத்தில்

## ஒருவர் பலி; மூவர் காயம்

மதவாச்சி நகரப் பகுதியில் நடைபெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியானதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வவுனியா நகரிலிருந்து அனுராதபுரம் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த வான் ஒன்று நிறுத்திவைக்கப்பட்டிருந்த இராணுவ ட்ரக் ஒன்றில் மோதுண்டதாலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

வானின் முன் ஆசனத்தில் பயணித்துக் கொண்டிருந்த அனுராதபுரம் ஜயந்தி மாவத்த பகுதியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட எம்.பாரூக் என்ற குடும்பஸ்தரே இவ்விபத்தில் படுகாயமடைந்து பின் மதவாச்சி வைத்திய சாலையில் அனுதிக்கப்பட்ட பின் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். இவருடன் குறித்தவானில் பயணித்துக்கொண்டிருந்த மேலும்மூவர் சிறு காயங்களுக்குட்பட்டுள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் பற்றி மதவாச்சி பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-6)

# முன்னாள் புலி உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் மறைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்கள் மீட்பு

## இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் மறைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களைக் கண்டு பிடிப்பதற்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டு வரும் முன்னாள் புலி உறுப்பினர்களின் ஒத்துழைப்பு கிடைப்பதற்காகவும், அவர்கள் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ள இடங்களைக் காட்டி வருவதாகவும் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தற்போது மறுவாழ்வு அளிக்கப்பட்டு வரும் 10 ஆயிரத்திற்கும் அதிகமான புலி உறுப்பினர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ள தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எதிர்வரும் காலங்களில் பாரியளவு ஆயுதங்கள் மீட்கப்படவுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (ஓ-6)

BOC ලංකා බැංකුව இலங்கை வங்கி

## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏலவிற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளைகளில் 04.12.2008 இற்கு முன்னர் நான்கு மாதங்களுக்கும் 4.12.2008 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம் நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக்கிளை | யாழ்ப்பாணம் அதி மேற்தரக்கிளை<br>யாழ்ப்பாணம்<br>2009செப்ரம்பர் 5ஆம்,6ஆம் திகதிகளில் (சனி,ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |
| யாழ்.2ம் மேற்தரக்கிளை | |
| திருநெல்வேலி (கோப்பாய் விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காரைநகர் | |
| சுன்னாகம் | |
| மானிப்பாய் (சங்கானை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காங்கேசன்துறை | |
| நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (ஊர்காவற்றுறை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| பருத்தித்துறை | |
| சாவகச்சேரி | |
| அச்சுவேலி | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.


தொலைபேசி இல. 021 222 3126
021 222 2735

உதவிப்பொதுமுகாமையாளர் ,
இலங்கை வங்கி (வடபிராந்தியம்),
யாழ்ப்பாணம்.

உதவிப் பொதுமுகாமையாளர்
இலங்கை வங்கி (வடபிராந்தியம்),
உதவிப் பொது முகாமையாளர்,
காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C-3009)

# நல்லூரான் திருவடிக்கு இன்று கார்த்திகை திருவிழா



இன்று கார்த்திகைத் திருவிழா. உள்வீதியில் கார்த்திகேயன் மயில்வாகனத்தில் பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் ஒலிக்க வலம்வருவார்.

## "கார்த்திகை குமரனை பணி மனமே"

கார்த்திகைத் திங்கள் கார்த்திகை திருநாள் - கந்தன்
மகிழ்வுறு அவதாரம்
கதியென கதறிடும் அடியவர்க் கெல்லாம் -கந்தன்
அருள் பொழிவதும் இந் நாளே
பண்ணிசையோடு பற்பல தேனிசை முழங்க -கந்தன்
வீதிவலம் வருவதும் இன்நாளே
பார்போற்றும் நல்லை திருக்கோயில் -கந்தன்
வள்ளி, தெய்வயானையோடு மகிழ்வதும் இந்நாளே

*ஆர்மோனிய இசையரசு, க.லோகேஸ்வரன்*

## கார்த்திகை விழாவினிலே

சோதியாக மின்னொளி சீருடன் விளங்க
வீதிகளில் நாற்புறமும் வாத்தியக் குழுக்கள்
காதினிக்க சர்க்கரையாம் பந்தலிலே தேன்மாரியாக
ஆதிசிவன் மைந்தனையே வந்தனைகள் செய்து
பண்ணிசையின் சிகரமென திருமுறை முழங்க
கார்த்திகை விழாவினிலே வேலவனைத் தொழுவோம்

*திருமுறைப் பண்ணிசைமணி, ச.சிவப்பிரகாசம்*

## கார்த்திகை ஊர்தியில் காவல் செய்ய வருக!

கார்த்திகை நாதனே காத்திட வேண்டும்
காரியம் யாவும் நிறைவேற்றிட வேண்டும்
நேர்த்திகள் உனக்கு ஆயிரம் வைத்தோம்
நிரந்தர தீர்வினைத் தந்திட வேண்டும்
ஏத்தியே நாளும் முறையிட்டுக் கேட்கிறோம்
எங்களின் கோரிக்கை ஏற்றிட வேண்டும்
போற்றியே உன்னைத் துதித்திட வேண்டும்
புதியதோர் தீர்வது தமிழர்க்கு வேண்டும்

*மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்*

## பார்த்து மகிழ்ந்திட நீ அருட்காட்சி தாராய்!

கார்த்திகைக் குமரனே! கந்தனே!! கடம்பனே!!!
கழலினை பணிந்திட்டோம் பரமபதம் அருளிடுவாய்!
கீர்த்திமிக்க நல்லூரில் இன்று அழகிய பூச்சப்பரத்தில்
பார்த்து மகிழ்ந்திட நீ அருட்காட்சி தாராய் !
நேர்த்திகள் பல வைத்திட்டோம் நிம்மதியைத் தந்தே
பூர்த்தி செய்திடுவாய் எம் வேண்டுதலை எல்லாம் !
வேர்த்து விறு விறுத்துப் பயத்துடன் வாழ்ந்தது போதும்
வேதனை நீக்கியே ஆறுதலளிப்பாய் போற்றி போற்றி !

*சிவநெறி கலாநிதி இராசையா ஸ்ரீதரன்*

## வாகனம் துற்றவனாய் வாரீரையா

வள்ளிதேவ யானையுடன் மகிழ்வாய் நல்ல
வாகனம்மீ துற்றவனாய் வாரீ ரையா
தெள்ளுதமிழ்ப் பாவாண ருன்னைப் போற்றி
தீட்டும்பா மாலைகளை உவந்து ஏற்று
வள்ளல்நீ வரக்கண்டு மங்கை நல்லார்
மனங்குளிர்ந்து தமைமறந்து மகிழ்ந்து தாமும்
கள்ளமில்லா வன்னன்பை அடைய வேண்டிக்
காட்டுகின்ற கரிசனையைக் காண்கின்றோமே

*சி.வெற்றிவேலு, வட்டுக்கோட்டை*

கார்த்திகை திருவிழாவினில் கார்த்திகேயா
உன் கருணை ஒளி செய்வாய் கந்தா!




நியூபவர் வேள்ட்
New power world
பலாலி வீதி, திருநெல்வேலி.

# நல்லூர்க் கந்தன் கார்த்திகைத் திருவிழா



## சிறப்பு மலர் - 14.08.2009



### நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி



"நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில் எல்லாம் மறப்பேனடி கிளியே இரவு பகல் காணேனடி கிளியே" என யோகர் சுவாமிகள் அருள்மொழி பகன்றிருக்கின்றார்.

நல்லூர் முருகனின் ஆலயம் விழாக் காலங்களில் இந்திரபுரி போல அழகுடனும் புதுப்பொலிவுடனும் எம்மனதைக் கொள்ளை கொள்ளத்தக்க வகையில் காட்சி அளிக்கும். சித்தர்களும், ஞானிகளும் நல்லைக் கந்தனின் அருள் அமுதத்தைப் பருகி மகிழ்ந்துள்ளார்கள். அவர்கள் கால் பதித்த புண்ணிய பூமி இது.

இத்தகு அருட்சிறப்புக்கள் கொண்ட நல்லைக்கந்தன் ஆலய மகோற்சவப் பெருவிழாக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இன்றைய தினம் கார்த்திகைத் திருவிழாவாகும். யாழ்ப்பாண மாவட்ட கலைஞர்கள் இணைந்து இசை ஆராதனை நிகழ்த்தி முருகப்பெருமானின் இவ் விழாவைச் சிறப்பிக்கின்றார்கள். இம் முருகனுக்குரிய கார்த்திகை விழாவையொட்டி வலம்புரி பத்திரிகையில் சிறப்பு மலர் வெளிவருவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். அச்சிறப்புமலருக்குரிய அருளாசியினை வழங்கி முருகப் பெருமானின் திருவருள் எங்கும் பெருக பிரார்த்தித்து அமைகின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

### கார்த்திகை கந்தனின் அருள் பெற வாரீர்



சிவ பூமியாக ஈழமணித் திருநாட்டில் ஞான பூமியாகத் திகழ்வது யாழ்ப்பாணக் குடா நாடாகும். சித்தர்களும், ஞானிகளும், அனுபூதி செல்வர்களும் வாழ்ந்த குடாநாடு முழுவதும் கந்தவேட் பெருமானின் அருளாட்சி நடைபெறுகின்றது. அலங்காரக் கந்தனாக நல்லூர் முருகன் ஆலயமும், அபிடேகக் கந்தனாக மாவிட்டபுரக் கந்தன் ஆலயமும், அன்னதானக்கந்தனாக செல்வச்சந்நிதி முருகன் ஆலயமும் போற்றப்படுகின்றது.

நல்லூர் கந்தனின் ஆலயத்தை மையமாகக்கொண்டே யாழ்ப்பாண இராச்சியம் அமைக்கப்பட்டிருந்தது. நல்லூர் கந்தனின் ஆலய மகோற்சவம் ஆடி அமாவாசையில் இருந்து 6ஆம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 தினங்கள் நடைபெறுவதுடன் குடாநாடே விழாக்கோலம் பூண்பதை நாம் காண்கிறோம்.


நல்லையம்பதியில் இன்றைய கார்த்திகைப் பெருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்யவும் வேலனின் ஆனந்தக் கோலத்தைக் காணவும் உலகின் பல்வேறு பாகங்களில் இருந்தும் வருகை தருகின்ற இந் நன் நாளில் நல்லூர் கந்தனின் கார்த்திகை சிறப்பு மலர் வெளிவருவது சாலச் சிறந்தது.

முருகனுக்கு பிரியமான தேனும் திணைமாவும் கொண்டு தூய நெய்யில் மாவிளக்கு ஏற்றி வழிபாடுசெய்வதற்கு ஏற்ற ஓர் சிறப்பான தினம் கார்த்திகைத் தினமாகும். இன்று ஆலய உட்பிரவாகத்தில் பல்வேறு தீப விளக்குகள் ஏற்றப்பட்டு *"ஓம் முருகா"* என்ற ஒளியுடன் வேல் துலங்க நல்லைக் கந்தனைக் காணலாம். *"வேலை வணங்குவதே வேலை"* என்ற செந்தமிழ் தேன் துளி தித்திக்க தித்திக்க நாமும் அவன்புகழ்பாடி பல நலனும் பெற்று வாழ்வோமாக!

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

திரு .தில்லை. ரவீந்திரநாதன் (ஆசிரியர்)

தலைவர் கட்டைப்பிராய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்



### கார்த்திகை நாட்களில் முருகனை வழிபாடு செய்பவர்கள் இருமைப்பயனையும் முக்தியையும் அடைகின்றார்கள்



சரித்திரப்பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இன்று (2009.08.14) 19ஆவது சிறப்பு மகோற்சவமாக கார்த்திகை திருவிழா நடைபெறுகின்றது. நல்லைக் கந்தனுடைய ஆலயத்தில் மகோற்சவம் ஆரம்பித்துவிட்டாள் அதன் அதிர்ச்சி யாழ்ப்பாணத்தில் மாத்திரம் அல்ல உலகம் முழுவதிலும் காணப்படுகிறது. திருவிழாக் காலம் முழுவதும் எந்த மயமும் கந்தமயமாகவே காட்சியளிக்கிறது.

எல்லா ஊர்களிலும் சிறந்த நல்லூரில் எழுந்தருளிய கந்தவேளின் மகோற்சவம் நடைபெறும் இருபத்தைந்து தினங்களும் தினந்தோறும் விரதம் அனுஷ்டித்து திருக்கோவிலுக்குச் சென்று வலம் வந்து திரு விழாவில் பங்கு பற்றி முருகன் அருள் பெற்று வீடு திரும்பும் பக்தர்களின் தொகையை அளவிட முடியாது.

இந்த சிறப்புகளோடு இன்றைய தினம் காத்திகைப் பெருவிழா கற்பூரஜோதித் தீபப் பெருவிழா இசைப்பெருவிழாவாக அற்புத மயமாக நல்லைக்கந்தன் ஆலயத்தில் நடைபெறுகின்றது.

சரவணப்பொய்கையில் ***அருவமாய் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய் பிரமமாய் நின்ற சோதிப் பிளம்பு ஆறுமுகங்களும் பன்னிரு கரங்களும் கொண்டு முருகனாக உதித்தார்.*** அப்போது மங்கல ஒலிகள் வானத்தில் எழுந்தன, தேவர்கள் மலர் மாரி பெய்தனர், அசுரர்களுக்கு தீ நிமித்தங்கள் தோன்றின. முருகக்கடவுள் ஆறு திருமுகங்களுடன் செந்தாமரை மலர் மீது வீற்றிருந்தருளினார். தேவர்கள் கார்த்திகை மாதர் அறுவரையும் பார்த்து முருகனை வளர்க்குமாறு பணித்தனர். முருகன் ஒரு திருமுகமுடைய ஆறு குழந்தையாக அம் மாதர்கள் அறுவரும் பாலூட்டி வளர்த்தனர். முருகக் கடவுள் குழந்தைமைக்கேற்ப பாலூண்டு பல திரு விளையாடல்களைப் புரிந்தனர். சிறு குறும்புகள் பல செய்தன. இவற்றைக் கண்டு தேவர்களும், கார்த்திகை மாதர்களும் களித்தனர்.

இங்ஙனம் நிகழும் நாட்களில் ஒரு நாள் சிவ பெருமான் உமை யம்மையாருடன் முருகனைக் காண சரவணப்பொய்கையில் எழுந்தருளினார். முருகன் தமது தந்தையாரை நோக்கி மனமகிழ்ந்தார். முகமலர்ந்தார். இறைவன் ஆணையின் வண்ணம் உமாதேவியார் இடப வாகனத்திருந்து விரைந்து இறங்கிப்போய் ஆறு திருவுருவங்களையும் இரு கையாலும் வாரி அணைத்து ஓருருவாக்கினார். அதுமுதல் முருகனுக்கு கந்தன் என்ற நாமம் உண்டாயிற்று. உமாதேவியார் தம் திருமுலைப் பாலை பொற் கிண்ணத்தில் கறந்து ஊட்டினார். இறைவன் திருமுன் கொண்டு சென்றார். இறைவன் இடப வாகனத்தில் இடமருங்கு உமையவனாய் இடையில் முருகனுமாக இருந்து சோமஸ்கந்த மூர்த்தியாகத் திகழ்ந்தார்.

இறைவன் கார்த்திகை மாதர்களுக்கு அருள் வளங்கி நம் மகன் உங்களால் வளர்க்கப் பெற்றமையின் *கார்த்திகேயன்* என்ற நாமத்தோடு விளங்கட்டும். கார்த்திகை நாட்களில் முருகனை வழிபடுவோருக்கு இருமைப் பயனையும் தந்து முக்தியையும் அளிப்போம் என்று திருவாய் மலர்ந்தருளினார். இவ்வாறு கார்த்திகை திருநாளுக்கு சிறப்புகள் பல.

வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்

அகில இலங்கை சமாதான நீதவான், ஆசிரியர் ஸ்ரான்லி கல்லூரி.

**மலராக்கம்:- ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி அருளானந்தன்**

### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



தமிழர் தெய்வமாகிய முருகனுக்கு தமிழர்கள் தாம் வாழும் இடமெல்லாம் கோயில்கள் அமைத்து வழி பட்டு வருகிறார்கள். ஈழ மணித்திருநாட்டில் பழமையும் பெருமையும் மிக்க முருகன் திருத்தலமாக விளங்குவது நல்லூர் கந்தசுவாமி ஆலயமாகும்.

சித்த புருஷர்களாகிய செல்லப்பாசுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்ற மகான்கள் நல்லூர் தேரடியில் இருந்து ஞான ஆட்சி புரிந்தார்கள். இருபாலை சேனாதிராஜ முதலியார், ஆறுமுக நாவலர், நாவலியூர் சோமசுந்தரப்புலவர் போன்ற அருளாளர்களும், கவிஞர்களும் நல்லூர் முருகப்பெருமான் மீது பாடல்களைப்பாடியுள்ளார்கள். இத் தகைய சிறப்புக்களை தன்னகத்தே கொண்டு விளங்குவது நல்லைக்கந்தன் ஆலயத்தில் விரோதி வருஷத்திற்கான மகோற்சவப்பெருந்திருவிழா கடந்த 27.07.2009 கொடியேற்ற வைபவத்துடன் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இன்று (14.08.2009) கார்த்திகை திருவிழா நாளாகும். இந்நாளில் முருகனுக்குரிய சிறந்த ஒரு திருநாளாகும். இந்நாளில் முருகப்பெருமான் அழகிய ஊர்தியில் பவனி வருகின்றார். இந்தக் கார்த்திகை உற்சவத்தை ஒட்டி வலம்புரி பத்திரிகையில் சிறப்பு மலர் முருகப் பெருமான் அருட்சிறப்புக்களை தாங்கி வெளி வருகின்றது.

அம் மலருக்கு எனது நல்லாசிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

க. கணேஷ்,

அரசாங்க அதிபர் /மாவட்டச் செயலர்,

யாழ்.மாவட்டம்.

### கார்த்திகை திருவிழாவில் கந்தனின் ஞான ஒளியைக்கண்டு இன்புறுவோமாக



ஈழத்தில் வாழும் சைவத்தமிழ் மக்களின் தேசக்கோயிலாகப்போற்றப்படும் நல்லைக்கந்தன் ஆலயத்திலே மகோற்சவம் ஆரம்பமாகிவிட்டால் யாழ்ப்பாணக்குடாநாடே புனிதமாகிவிடும். அடியார்கள் அனைவருடைய நாவிலும் முருக நாமம் ஒலிக்கும். கந்தா, முருகா, கதிர்வேலா, ஞானபண்டிதா, முருகையா எனப் பக்தர்கள் நல்லூரான் வீதியிலே ஆடியும் பாடியும் அழுதும் தொழுதும் அவனை வணங்கிவரும் காட்சியினை மகோற்சவ காலத்திலே நல்லூரில் காணலாம்.

*நல்லூரானைக் கும்பிட்டு நீ பாடு-அதனாலே*

*நாட்டில் உள்ள பிணிகள் ஓடும்* என யோகர் சுவாமிகள் பாடியிருக்கின்றார்.

தேனும் திணைமாவும் சேர்த்து மாவிளக்கு தீபம் ஏற்றி கார்த்திகை திருவிழாவில் அடியார்கள் முருகனை வழிபடுகின்றார் கள். அந்தத் தீப ஒளியிலே நாமும் முருகனின் ஞான ஒளியினைக் கண்டு இன்புறுவோமாக.

சிவத்தமிழ் வித்தகர் சிவ . மகாலிங்கம்,

இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.


"மால் மருகா வேல்முருகா துணையெமக்கு"

ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

இல. 119, பருத்தித்துறை வீதி,

நல்லூர் யாழ்ப்பாணம்.

தொ.பே. 021 222 6596

"கார்த்திகை நாதா சரணம்"

ரூபா பன்முக வர்த்தகம்

இல.104, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நிறுவன முதல்வர்கள்:-

சு.செல்வரத்தினம், சு.ராஜகுமாரன்

"யாமிருக்க பயமேன்"

LUXMY TRADERS

316, Hospital Road, Jaffna.

T.P.021 222 2628

"நல்லைக் குமரனைத் தொழ நம் வினை ஆறும்"

கிருஸ்ணா நகை மாளிகை

இல. 9, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே. 021 222 5046

கிருஸ்ணா அடைவு கடை

370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

"நல்லைக்கந்தனுக்கு அரோகரா"

RAM COMMUNICAITON

No.06 Hospital Road

Jaffna

Fax No 021 222 8428

Tel No: 021 222 2007 Hotline : 0778694353

"கார்த்திகை வேலனுக்கு அரோகரா"

லிங்கம் களஞ்சியம்

லிங்கம் தொலைத் தொடர்பகம்

இல. 246, வில்லூன்றி பிள்ளையார்

கோவிலடி கொட்டடி, யாழ்ப்பாணம்.

"மால்மருகா வேல்முகா துணையெங்கும்"

ராஜா கிறீம் ஹவுஸ்

இல 36, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

தொ.பே. 021 222 8437

"வேலும் மயிலும் துணை"

ஏ.ஏ.நாகா இரேஷர்

ஆவரங்கால், கரதடிவீதி, அச்சுவேலி

T.P: 021 2226121 - 060 221 8544 -077 3583895

இரேஷர் கல்வி வகைகள், சீமெந்துக்கல்லு தூண்கள், P.V.C பைப் Notola, Nippon சீமெந்து ஆகியன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

"குமரன் தாள் பணிவோம்"

தியாகி அறக்கொடை நிலையம்

527, நாவலர் வீதி,

யாழ்ப்பாணம்.

"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"

லிங்கன் கிறீம் ஹவுஸ்

இல 119, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

S.A. Chandrabavan (Publisher & Teacher) 077-3013062

# புலமைப் புலரி பப்ளிகேஷன் -கொழும்பு

மாணவர்களைபாடசாலைக்குத்தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான
புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் தரம் 05 மாணவர்களுக்கு வழங்கப்படும்

# மாதிரிப் பரீட்சை -2009

நேரம் :-45 நிமிடம்
வினாப்பத்திரம் (I)
பெற்ற புள்ளி ( )

பரீட்சை இலக்கம் 13

எஸ்.ஏ.சந்திரபவன்

✠ 01 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள மூன்று விடைகளில் சரியான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக.

✠ கீழே 01ஆம் ,02ஆம் வினாக்களில் முதலில் உள்ள பாடல் விபரிக்கின்ற படத்தைத் தெரிவு செய்க.

01. இரண்டு காலால் மிதித்தே நாம்
இனிய பயணம் செய்கின்றோம்
இரண்டு வட்டக் கால்களினால்
இதமாய் எம்மைச் சுமக்கிறதே




02. காலையாகி நாமெல்லாம்
கண்விழிக்கக் காரணமாம்
மாலையாகி அவன் மறைய
மானிடர் நாம் கண்ணயர்வோம்







03. படம் Bயுடன் Dயுடன் பொருந்தும் மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.




04. படம் A யுடனும் C யுடனும் தொடர்புபடும் உரு கீழ் வருவனவற்றுள் எது?




✠ கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து,5ஆம் 6ஆம் வினாக்களுக்கு விடை தருக.

ஆலையிலே சோலையிலே
ஆலம்பாடிச் சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும்
கிறுகியடிக்கப் பாலாறும்

05. இப்பாடல் ஒரு -
1.சந்தைப்பாடல் 2.வயல்பாடல் 3.விளையாட்டுப்பாடல்


06.பாடலில் குறிப்பிடப்படாத ஓர் விளையாட்டு உபகரணத்தின் பெயர் யாது?
1.பந்து 2.கிட்டிப்புள் 3.பம்பரம்


07.ஆழமறியாமல் காலை விடாதே இப்பழமொழியின் கருத்து யாது?
1.எதையும் ஆராய்ந்து செய்யவேண்டும்
2.பலசாலியும் தோல்வியடையலாம்
3.ஒருவரின் தன்மையை அறிந்து உதவுதல்

08. 'வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்' இக்கருத்தைக் கூறும் பழமொழி யாது?
1.இளங்கன்று பயமறியாது
2.இரக்கப் போனாலும் சிறக்கப்போ
3.ஆத்திரக் காரனுக்கு புத்தி மத்திமம்

A, B, C, D, E, F, G, H, I, J, K, L, M., N, O, P, Q, R, S, T, U, V, W, X, Y, Z

09. A தொடக்கம் Z வரையான மேலுள்ள எழுத்துக்களில் சமச்சீர் தன்மையுடைய எழுத்துக்கள் எத்தனை உள்ளன?
1.9 2. 11 3. 13

10.  முக்கோணவடிவமுள்ள இக்காணியைச் சுற்றி 12 தூண்கள் சம இடை வெளிகளில் நாட்டப்பட்டுள்ளன. எனவே இக்காணியின் ஏதாவது ஒரு பக்கத்திலிருந்து நோக்கும்போது எத்தனை தூண்களை அவதானிக்கலாம்?
1.நான்கு 2. ஐந்து 3.ஆறு

11. 

இவ் வட்ட வடிவக் கிராமத்தில் வாழும் A என்பவர் தனது நண்பர்களான B,C,D,E, F, G,H ஆகியோரிடம் ஒழுங்குமுறையில் சென்றார். (Bயிடம் சென்று , Cயிடம் சென்று, Dயிடம் சென்று ... இவ்வாறு எழுத்துக்களில் ஒழுங்கு முறையில் சென்றார்)

12. அவர் H நண்பரைச் சென்றடைந்தபோது வட்டத்தின் மையத்தை எத்தனை தடவைகள் கடந்திருப்பார்.
1. 3 தடவைகள் 2. 4 தடவைகள் 3. 5 தடவைகள்

13. Aயிலிருந்து நேர்கோடு வழியே B வரையிலான தூரம் 3 கிலோ மீற்றரும், B யிலிருந்து C வரையான தூரம் ஒரு கிலோ மீற்றரும் எனின், அவர் F நண்பர் வரை பயணித்த தூரம் யாது?
1.11 கிலோ மீற்றர் 2.15 கிலோமீற்றர் 3.18 கிலோமீற்றர்


✠ கீழுள்ள கூடுகளில் காணப்படும் பொருட்களின் விலைகளை அவதானித்து, விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| 4 கொப்பி 48.00 | 2 பென்சில் 12.00 | ஒரு பேனா 12.00 | 2 கலர் பெட்டி 48.00 |

14. விலைகள் சமமாக உள்ள பொருட்கள் இரண்டும் எவை?
1.கொப்பி,பென்சில் 2.கொப்பி, பேனா 3.பென்சில் , பேனா

15. ஒரு கலர் பெட்டி வாங்கும் பணத்திற்கு எத்தனை பென்சில்கள் வாங்கலாம்?
1. நான்கு 2. ஆறு 3. எட்டு

✠ கீழே மின்குமிழ்கள் தொடர்பான விளக்கப்படங்களையும் வசனங்களையும் வாசித்து, விடை தருக.





பிரகாசம் குறைந்த ஒரு மின்குமிழ் 8 மின்குமிழ்களுக்கு சமனாகும்
பிரகாசம் கூடிய ஒரு மின் குமிழ் 6 மின்குமிழ்களுக்கு சமனாகும்.

✠ மேலுள்ள படம் மற்றும் அறிவுறுத்தல்களின் விளக்கங்களின்படி

16. பிரகாசம் குறைந்த மின் குமிழ்கள் வீடு A யிலா Bயிலா அதிகம்
(------------------------------------------)

17. இரு வீடுகளிலும் உள்ள பிரகாசம் கூடிய மின்குமிழ்கள் எத்தனை?
(------------------------------------------)

18. 
கூட்டில் அதிகளவில் உள்ள உரு எது?
1. ➤ 2. ☎ 3. ↺

19. மிகக் குறைந்தளவில் உள்ள உரு எது?
1. ∿ 2. ↺ 3. ☎

20. சம அளவில் காணப்படும் உருக்கள் இரண்டும் எவை?
1. ↺ ☎ 2. ☎ ∿ 3. ➤ ∿

✠ ▲ + ■ = ● இம் மூன்று வடிவங்களினதும் எண் பெறுமதிகள் தொடர்பான கணிதச் செய்கையை அவதானித்து விடை தருக.

■ இதன் எண் பெறுமதி =5

21. ● இதன் பெறுமதியாக ஊகிக்கக் கூடிய விடை யாது?
1.நான்கு 2. மூன்று 3.எட்டு

22. ■ + ▲ இவற்றைக் கூட்டினால் கிடைக்கும் பெறுமதி 8 எனின்,
■ – ▲ இவற்றைக் கழித்தால் கிடைக்கும் பெறுமதி யாது?
1. ஒன்று 2. இரண்டு 3. மூன்று

23. விபுலன் மூன்று நாட்களுக்கு ஒரு முறை வங்கிக்குச் செல்வான். துஷ்யந்தன் நான்கு நாட்களுக்கு ஒருமுறை வங்கிக்குச் செல்வான். இதன்படி ஜனவரி 2ஆம் திகதி இருவரும் வங்கியில் சந்தித்தனர் எனின், இனி இவர்கள் இருவரும் வங்கியில் சந்திக்கக்கூடிய திகதி யாதாக இருக்கும்?

1.13ஆம் திகதி 2. 14ஆம் திகதி 3. 15ஆம் திகதி

24.மூன்று மாடுகளையும் நடத்திக் கொண்டு ஒரு மனிதன் 9 கிலோமீற்றர் தூரம் சென்று ஓரிடத்தில் தங்கினான். ஒரு மாட்டை 9கிலோ மீற்றர் தூரம் நடத்திச் செல்வதற்கு 10 நிமிடங்கள் தேவைப்பட்டன எனின், 3 மாடுகளையும் நடத்திச் செல்வதற்கு தேவையான நேரம் யாது?

1.10 நிமிடங்கள் 2. 30 நிமிடங்கள் 3. 90 நிமிடங்கள்

25. ஒரு பயிற்சிப் புத்தகத்திற்கு கவர் போடுவதற்கு ஒரு தாளின் 1/4 பகுதி போதுமானது. எனவே இது போன்ற நான்கு தாள்களின் மூலம் எத்தனை பயிற்சிப் புத்தகங்களுக்கு கவர் போட முடியும்?

1.4 புத்தகங்களுக்கு 2. 8 புத்தகங்களுக்கு 3.16 புத்தகங்களுக்கு

26.A கடிகாரத்தில் சிறிய முள் (மணிமுள்) 6 இற்கும் இடையிலும், பெரிய முள் (நிமிடமுள்) 10இலும் காணப்படுகிறது. B கடிகாரத்தில் அதை விட 30 நிமிடங்கள் குறைவாக நேரம் காட்டுகின்றதெனின் B கடிகாரத்தின் நேரம் யாதாக இருக்கும்?

1.5மணி 10 நிமிடம் 2. 5மணி 50 நிமிடம் 3. 4மணி 40 நிமிடம்

✠ **கீழ் வரும் கடிதத்தின் பகுதியை வாசியுங்கள்**

அன்பின் பிரதீப் அறிவது,

நாங்கள் அனைவரும் சுகமாக இருக்கிறோம். உனது நலம் எப்படி? உனது அப்பாவை சென்ற வாரம் பேருந்தில் சந்தித்தேன். உனது தங்கை பிரவினா புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாகக் கூறினார் . வாழ்த்துக்கள் எனது தம்பி நர்மதன் அடுத்த வருடம் பரீட்சை எழுதுகின்றான். உன்னால் முடிந்தால் வினாத்தாள்கள், நூல்கள் என்பன அனுப்பி வை. உனது நண்பி துவாரகாவையும் சுகம் கேட்டதாகக் கூறு.

இப்படிக்கு
முஸ்தாக்

27.இக்கடிதத்துடன் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் எத்தனை பேர்?
1.இரண்டு பேர் 2. நான்கு பேர் 3.ஆறு பேர்

28.பேருந்தில் சந்தித்துக் கொண்ட இருவரும் யாவர்?

1.பிரதீப் -முஸ்தாக்கின் அப்பா
2. பிரதீப்பின் அப்பா- முஸ்தாக்
3.பிரதீப்- முஸ்தாக்

✠ **பின்வரும் கவிதையை வாசித்து, இடைவெளிகளில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க**

பூ......... A..........தொழில் இலங்கும் பொன் இலங்கும் -என்றும்
புகழ் இலங்கும்........B........... இலங்கும் பூதரமும் இலங்கும்

29. இடைவெளி A யில் வரவேண்டிய சொல் எதுவாக இருக்கும்?

1. வனம் 2.இலங்கும் 3.சோலை


30. இடைவெளி B யில் வரவேண்டிய சொல் எதுவாக இருக்கும்?

1.வளம் 2. [illegible] 3. சீர்


31. ஒரு சதுர வடிவ அட்டையிலுள்ள ஒரு படத்தினை நான்கு முக்கோண துண்டங்களாக கீழே வெட்டி காட்டப்பட்டுள்ளது. அதன்படி கீழ் உள்ள 5 துண்டங்களில் முதலில் உள்ள சதுரப் படத்தை ஆக்குவதற்கு தேவையற்ற உருவெனத் தெரிவு செய்க




32





இத் தகரத் துண்டிலிருந்து வெட்டிப் பெறப்பட்ட A எனும். பகுதியினால் ஏதோ ஒரு முறையில் ஆக்கக் கூடிய உரு பின்வருவனவற்றுள் எது?




✠ **33 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

33.





கூட்டினுள் தரப்பட்டுள்ள சொற்களை கீழே ஏதோ ஓர் ஒழுங்கு முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளது. மீதியாக இருக்கும் இரண்டு இடைவெளிகளையும் பொருத்தமாக நிரப்புக

456 → 635 → 527 → 762→...... → ........

34. கீழே தரப்பட்டுள்ள உதவிக் குறிப்புகளின் படி குறுக்கெழுத்துப் புதிர்ப் பெட்டியை இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் நிரப்புக.

இடமிருந்து வலம் : 1 என்னைப் பெற்றவள்
2 புத்தகம் எடு, ................படி


மேலிருந்து கீழ்:- 1 அன்னையும் இவரும் தெய்வங்கள்
2 30 நாட்களைக் கொண்டது.




35. கீழே முதலிரண்டு தொகுதிகளிலும் உள்ள பொருட்களின் விலைகளை அறிந்து மூன்றாவது தொகுதியின் விலையைக் காண்க.




✠ **கீழே உள்ள கைத்தொலை பேசியில் உள்ள இலக்கங்களை அவதானித்து விடை தருக.**




36. முக்கோண அமைப்பில் உள்ள மூன்று இலக்கங்களைக் கூட்டிய கூட்டுத்தொகை 14 ஆகும். அந்த மூன்று இலக்கங்களையும் எவையென எழுதுக.

(----------------------------------)

37. 8 இற்கு வடக்காகவும் 3இற்கு மேற்காகவும் உள்ள எண்ணைவிட, 1 இற்கு தெற்காகவும் 6இற்கு மேற்காகவும் உள்ள எண் பெரியதா? (ஆம்/இல்லை)

(----------------------------------)

✠ ஒரு விழாவின்போது A எனும் சந்தியிலிருந்து B எனும் சந்தி வரையுள்ள 1000 மீற்றர் தூரத்திற்கு ஒரு பக்கத்திற்கு 10 கம்பங்கள் வீதம் வீதியின் இரு பக்கங்களும் கம்பங்கள் நாட்டப்பட்டு, மின் விளக்குகளாலும் வெளிச்சக்கூடுகளாலும் அலங்கரிக்கப்பட்டன. ஒவ்வொரு கம்பத்திலும் ஒவ்வொரு மின்விளக்குகள், இரு கம்பங்களுக்கிடையில் நான்கு வெளிச்சக்கூடுகளும் தொங்கிவிடப்பட்டன.

38.அங்கு பயன்படுத்தப்பட்ட மின் விளக்குகள் எத்தனை?

(-------------------------------------)

39.அங்கு அலங்கரிக்கப்பட்ட வெளிச்சக்கூடுகள் எத்தனை?

(----------------------------------------)

40. இரண்டு கம்பங்களுக்கிடையில் ஒரு தாமரைப் பூ அலங்காரம் வைக்கப்பட்டது எனின், வீதியின் இரு மருங்கிலுமாக மொத்தம் எத்தனை தாமரைப் பூக்கள் பயன்படுத்தப்பட்டன.

(------------------------------------------)

# விண்டோஸ் உதவிடும் புரோகிராம்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**Bump Top**

(www.bumtop.com) விண்டோஸ் டெஸ்க் டொப்பினை ஒரு முப் பரிமாண டெஸ்க்காக மாற்றிக் காட்டுகிறது. பைல்கள் அடுக்குகளாகக் காட்டப்படுகின் றன. இவற்றைச் சுற்றி வந்து தேவையான தை எடுத்துக் கொள்ளலாம். இவை காட்டும் சுவர்களில் எதையேனும் நாம் ஒட்டி வைக் கலாம்.

எடுக்கலாம். இது விண்டேஸ் எக்ஸ்பி, விண்டா மற்றும் 7 தொகுப்பிலும் இயங்கும் எனக்கூறப்படுகிறது. இது இலவசமே. ஆனால் ப்ரோ எடிஷன் வேண்டுமானால் கட்டணம் செலுத்திப் பெறவேண்டும்.

**Minime**

(www.saphua.com/bloh/?pageid =18)

இலவசமாய் கிடைக்கும் இந்த புரோ கிராம் அனைத்து விண்டோக்களையும் சிஸ்டம் ட்ரேக்கு ஒரு ஹாட் கீயினை அழுத் துவதன் மூலம் மேற்கொள்கிறது. அனைத் தையும் ஒரு சிங்கிள் ஐகனில் வைக்கிறது. இந்த ஐகனைக் கிளிக் செய்து ஒரு மெனு வாகப் பெற்று எவை இயங்கிக் கொண்டிருக் கின்றன என்று பார்க்கலாம்.

**BackUp**

Maker www.ascomp.de/index.php?php=proq=backupmaker

எளிய பேக் அப் புரோகிராம். முற்றிலும் இலவசம். கணனியில் நாம் உருவாக்கும் பைல்களை இன்னொரு டிரைவ், யு.எஸ்.பி. பிளாஷ் டிரைவ் ,சிடி/ டிவிடி அல்லது ஒரு எப்.டி.பி.வெப்சைட் என எந்த இடத்திற்கும் அனுப்புகிறது. ஏதாவது ஒரு பைலை இழந்து விட்டால் மீட்டுத் தருகிறது.

**Carbonite**

www.carbonite.com

ஆண்டுக்கு 35 டொலர்செலுத்திவிட்டால் எத்தனை பைல்களையும் ஒன்லைனில் இந்த புரோகிராம் சேவ் செய்து வைக்கிறது. இடம் எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறது. வரயறையே இல்லை. இது தானாகவே கணனிகளில் பைல்கள் உரு வாக்கத்தினைக் கண்காணித்து ஒன்லைன் ஸ்டோரேஜுக்கு அனுப்புகிறது.

இதனால் நீங்கள் எந்த இடத்திலும் எந்த கணனியிலிருந்தும் பைல் களைப் பெற்று இயக்கலாம்.




**DriveImageXML**

www.runtime.org/driverimagexml.htm

இலவசமாகக் கிடைக்கும் இந்த புரோகிராம் பெர்சனல் கணனி பயன்பாட்டில் இருக் கும்போது கூட மைக்ரோ சொப்ட் தரும் வொல்யூம் ஷேடோ சர்வீசஸ்(Volume shadow Services) பயன்படுத்தி உங் கள் ஹார்ட் டிரைவிலன் டிஸ்க் இமேஸ் ஒன்றை உருவாக்குகிறது. பின் இத னைப் பெற்று அனைத்துப் பைல்களையும் அல்லது குறிப்பிட்ட டிரைவின் பைல்களைத் திரும்பப் பெற்று பயன்படுத்தலாம்.

**Drivermax**

www.innovativesol.com/drivermax



இதுவும் இலவசமாகக் கிடைக்கும் ஒரே புரோகிராம் இதன் தனிச்சிறப்பு என்ன வென்றால் இது டிரைவர் புரோகிராம்களை பக் அப்பாக வைத்துக் கொள் ளும்.

நம் கணனியின் ஹார்ட் டிஸ்கை ரீ போர்மட் செய்து புரோ கிராம்களை இதிலிருந்து பெறலாம். மேலும் இந்த டிரைவர் க ளுக்கு அவ்வப்போது அந்த நிறுவனங்கள் அப்டேட் வழங்கு கைகயில் இந்தத் தளம் தானாகவே அவற்றை அப்டேட்ட செய்து நமக்கு வழங் குகிறது.

(தொடரும்)

# மால்வெயர் புரோகிராம்கள்

என்ன? எங்கே? எப்போது?

அண்மையில் சிறந்த ஓர் இணையத் தளம் பார்த்தேன் நம் கணனியையும் நம்மையும் பயமுறுத்தும் பாதுகாப்பு குறித்து நம்மை அப்டேட் செய்திடும் வகையில் அந்த தளம் செயற்படுவதனைக் கண்டு கொண்டேன். அந்த தளத்தின் முகவரி http: // mtc.sri.com/.CXSRlInternati onalMal ware ThreatCenter என அழைக் கப்படு கிறது.



இது இணையச் செயல்பாட்டினை மொனிட்டர் செய்திடும் ஒரு தளமாக இயங்குகின்றது. இதில் கணனி அவ் வப் போது அச்சுறுத்தும் மால்வெயர் புரோகிராம் களைப் பற்றி விலாவாரி யாகக் கூறுகிறது.

ஒவ்வொரு மோசமான மால்வெயர் புரோகிராமும் எப்போது வந்தது; எந்த அளவில் மோசமானது; அதனை எதிர்க்கும் பணியினை யார் யார் மேற் கொண்டுள்ளார்கள்; அதனைத் தவிர்க்க என்ன செய்திடலாம் என்பது போன்ற தகவல்களை சரியான புள்ளி விபரங்களுடனுடன் தருகிறது .எனவே ஏதேனும் ஒரு மால் வெயர் குறித்து நீங்கள் சந்தேகப்பட்டு அது குறித்த தகவல்கள் வேண் டும் என்றால் உடனே இந்த தளத்தினை அணுகலாம் .அந்த மால்வெயர் புரோகிராமின் பெயரைக் குறிப்பிட்டு அது எங்கிருந்து வருகிறது என்ற தெளிவான தகவலைத் தருகிறது.

அத்துடன் குறிப்பிட்ட மால்வெயர் புரோ கிரமினை உங்கள் கணனிக்குள் நெருங்க விடாமல் இருக்க அது வரும் ஐ.பி. முகவரியினைத்தந்து அந்த முகவரியில் இருந்து எது வந்தாலும் அனுமதிக்காமல் செட் செய்திடும்படி கூறுகிறது. பிஷ்ஷிங் மற்றும் வேறு வகைகளில் உங்கள் கணனிக் குள் வரும் புரோகிராம்களை அனுப்பு வோரில் பொதுவான டொமைன் பெயரை யும் குறிப்பிடுகிறது.

இப்போது உலாவந்து கொண்டிருக்கும் மால் வெயர் புரோகிராம்களை குறிப்பிட்டு இவற்றிற்கு எதிரானஅன்ட்டி வைரஸ் சொப்ட் வெயர்களை யார் தயாரித்து வழங் குகிறார்கள் என்ற தகவலும் இங்கு கிடைக் கிறது.

இதனை அறிந்து கொண்டு அத்த கைய தளங்களுக்குச் செல்லாமல் இருக் கலாம். இல்லையா!

எனவே தங்கள் கணனி மிகவும் பாது காப்பாக இருக்க வேண்டும் என்று எண்ணு பவர்களுக்கு இந்த தளம் அரிய தகவல் களை தரும் தளமாக உள்ளது தடுக்கி றோமோ இல்லையோ கெடுதல் விளை விப்பவர்கள் குறித்து அறிந்து கொள்வது நல்லது தானே.

# யாஹூவுடன் கைகுலுக்கியது மைக்ரோசொப்ட்

பல மாதங்களாக நீடித்து வந்து இழுபறி நிலையை மைக்ரோசொப்ட் மற்றும் யாஹூ நிறுவனங்கள் ஒரு பத்தாண்டு ஒப்பந் தத்தினை போட்டு முடிவிற்குக் கொண்டு வந்துள்ளன. தேடல் இஞ்சின் தொழில் நுட்பத்திலும் அதனை சார்ந்த விளம்பர வர்த்தகத்திலும் கூகுள் கொண்டிருக்கும் முதலிடத்தை அசைத்துப் பார்ப்பதற்காக இந்த ஒப்பந்தம் இருக்குமோ என்ற எண் ணம் இணைய உலகில் அனைவருக்கும் எழுந்துள்ளது.

தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந் தப்படி மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் பிங் சேர்ச் இன்ஜினைத் தன் தளத்தில் யாஹூ பயன்படுதிக்கொள்ளும்.

அத்துடன் விளம்பர இட விற்பனையை உலக அளவில் மேற்கொள்ளும் உரிமை யை யாஹூ மட்டுமே பெறுகிறது.

யாஹூ நிறுவனம் அதன் பயனாளர் கள் மற்றும் இணைய வர்த்தகச் சந்தை ஆகிய அனைத்திற்கும் பல பயன்களை இந்த ஒப்பந்தம் தரும் என்று யாஹூ நிறு வனத் தலைவர் அறிவித்துள்ளார். மைக் ரோசொப்ட் நிறுவனத் தலைவர் போல்ஸ் டிமர் இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கை யில், இரு நிறுவனங்களும் வெற்றியடை யும் ஒரு இனிய ஒப்பந்தம் இதுஎன்று குறிப்பிட்டார்.

மைக்ரோசொப்ட் நிறுவனம் யாஹூ நிறுவனத்தின் சேர்ச் இஞ்சின் தொழில் நுட்பத்தினைப் 10 ஆண்டுகளுக்குப் பயன் படுத்த தனி உரிமையினைப் பெறுகின்றது. இதனை தன் தளங்ககளில் இயக்கிவரும் சேர்ச் இஞ்சின் தொழில்நுட்பத்துடன் ஒருங்கி ணைத்துப் பயன்படுத்தும்.18 மாதங்களுக்கு முன்புதான் யாஹூவை எடுத்துக்கொள்ள மைக்ரோசொப்ட் தன் முதல் அஸ்திரத்தை வீசியது.

பெப்ரவரி 1 2008 அன்று 4 ஆயிரத்து




460 கோடி டொலருக்கு விலை பேசியது. இது யாஹூவைப் பெரிய அளவில் உலுக் கியது. அதன்தலைவர் இடத்தில் புதிய ஒருவர் பொறுப்பேற்றார். மூன்று புதிய இயக்குநர் கள் நியமிக்கப்பட்டனர்.

இருப்பினும் திரைமறைவில் இந்த இரு நிறுவனங்களும் தொடர்ந்து உறவாடிக் கொண்டுதான் இருந்தன என்று பலரும் பேசிக்கொண்டிருந்தனர்.எல்லாம் எதற்காக? இணையத் தொழில்நுட்பத்தில் மாபெரும் சக்தியாக உருவெடுத்துள்ள கூகுள் நிறுவ னத்தை அதன் இடத்திலிருந்து இறக்கத் தான் இந்த ஏற்பாடுகள்.தற்போது வந்த ஒப் பந்த அறிவிப்பு இதனை உறுதிப்படுத்தி யுள்ளது. இதுவரை தனி ஒரு சேர்ச் இஞ்சின் நிறுவுனமாக இயங்கிவந்த யாஹூ அந்த அடையாளத்தினை இந்த ஒப்பந்தம் மூலம் முறித்துக்கொண்டு விட்டது.

மைக்ரோசொப்ட் முதலில் அறிவித்த பங்கு முதலீட்டினை ஜெர்ரியாங் காட்டாக மறுத்துத் தன் நிறுவ னத்தைப் பாதுகாப் பற்ற அதிதீவிர முயற் சிகள் எடுத்தார். இத னைத் தொடர்ந்து அடுத்த பங்குகளைக் கொண்டிருந்த கார்ல் தன்பக்கத்திற்கு மூன்று இயக்குநர் இடங்க ளைப் பிடித்தார். தாக் குப் பிடிக்க முடியாத ஜெர்ரியாங் தலைவர் பதவி யிலிருந்த இறங்க கேரல் போர்ட்ஸ் யாஹூ வின் தலைமை நிர்வாக அதிகாரியானார்.

ஒரு பெண்ணுக்குரிய நிதானம் மற்றும் வேகத்துடன் சிந்திக்கத் தொடங்கி கேரல் பல நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கினார். தொடர்ந்து பேச்சுவார்த்தை நடந்துகொண்டே இருந்தது. இதற்கு வலுவான காரணமும் இருந்தது. மைக்ரோசொப்ட் நிறுவனத்திடம் தேவையான பணமும் இருந்தது. தேவை களும் இருந்தன. இந்த பிரிவில் உயரச் செல்ல ஆசையும் இருந்தது. யாஹூ ஏற் கனவே உயரத்தில் இருந்ததால் அதனைப் பிடிக்க மைக்ரோசொப்ட் திட்டமிட்டது.

அதேநேரத்தில் யாஹூ தன் செலவு களைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தது.வெளியிலிருந்து சேர்ச் இஞ்சின் தொழில்நுட்பத்தினைப் பெற்றால் ஆண்டு க்கு 50 கோடி டொர் மிச்சம் பிடிக்க முடியும் என்று கோர்ட்ஸ் கருதினார். இன்றைய ஒப்பந்தம் குறித்துப் பேசுகையில் அனை வரும் இந்தக் கணம் மிச்சாமாவதனையே குறிப்பிட்டனர்.

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் பிங் சேர்ச் இஞ்சின் தொழில்நுட்பத்தின் திறனும் தன்மையும் உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. எனவே இது யாஹூ நிறுவனத்திற்கு பெரிய உறுதுணையாக இருக்கும். இப்போதைய ஒப்பந்தம் யாஹூவின் பணிக் கலாசாரத் தில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். கடந்த 18 மாதங்களாகத் தன் சேர்ச் இஞ்சின் தொழில்நுட்பத்தில் மாற்றங்களை ஏற்ப டுத்தி முன்னேற்றப் பாதையினை பார்க்க உழைத்துக்கொண்டிருந்த யாஹூ திடீரென இன்னொரு நிறுவனம் அமைத்த தொழில் நுட்பத்தினை தழுவிக்கொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் இரண்டு நிறுவனங் களுக்குமே ஒரு புதிய பாதையைக் காட்டி யுள்ளன. ஒவ்வொரு மாதமும் தன் தளத்தில் வந்து தேடும் 30 கோடி வாடிக்கை யாளர் களுக்கு தொடர்ந்து சேவையளித்து தக்க வைக்க வேண்டிய நிலையில் யாஹூ உள் ளது.மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் விளம் பரங்களையும் விற்பனை செய்திடும் உரிமை யாஹூவிற்குப் பெரிய அளவில் கைகொ டுக்கும் என்று எதிர்பாக்கப்படுகிறது.

# கே.பி.மூலம் புலிகளின் நிதியினைப் பெற்று இலங்கையின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டும்

## எல்லாவல மேதானந்த தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளினால் நாட்டிற்கு செய்யப்பட்ட அழிவுகளை கே.பி.யின் ஊடாக விசாரணை செய்து புலிகளின் நிதியினைக் கொண்டே வடக்கையும் ஏனைய பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும் எம்.பி.யு மான எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கே.பி.யின் கைது அநுராதபுர யுகத்திற்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாகும். இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக கே.பி. விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் உள்நாட்டுக் கைதியை இந்தியாவிற்கோ ஏனைய சர்வதேச நாடுகளிற்கோ காட்டிக் கொடுக்கக்கூடாது.

புலிகளின் நிதியினை கே.பி. ஊடாகப்பெற்றுக்கொண்டு அவற்றை இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெற்றுக் கொண்ட கடனே இலங்கை சர்வதேசத்திடமிருந்து பெறும் இறுதிக் கடனாக அமைய வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கே.பி.யின் கைது தொடர்பாக நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கையிலேயே எல்லாவல மேதானந்த தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

புலிகளின் சர்வதேச செயற்பாட்டாளரும் சர்வதேச பொலிஸாரினால் தேடப்பட்ட குற்றவாளியுமான கே.பி.யை இலங்கை பாதுகாப்பு பிரிவினால் கைது செய்ய முடிந் தமை நாட்டிற்கு கிடைத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியாகும்.

புலிகளினால் நாட்டிற்கு செய்யப்பட்ட அழிவுகளை கே.பி.யின் ஊடாக விசாரணை செய்து புலிகளின் நிதியினைக் கொண்டே வடக்கையும் ஏனைய பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

தொடர்ந்தும் உலக நாடுகளின் கடனுதவிகளில் இலங்கை அரசாங்கம் தங்கியிருக்காது சொந்த முயற்சிகளைக் கையாள பழகிக் கொள்ள வேண்டும்.

இலங்கை போன்ற நாடொன்றிற்கு கடன் அல்லது வரி அதிகரிப்பே உள்நாட்டு அபிவிருத்திக்கான ஒரே வழி. ஆனால் தற்போது உள்நாட்டுப் போர் முழுமையாக முடிபடைந்துள்ளது. இதனால் பாரிய செலவும் குறைந்துள்ளது.

எனவே நாணய நிதியத்திடமிருந்து பெற்றுக் கொண்ட கடனை முறையாக நிர்வகித்து நாட்டை கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்த வேண்டும். அத்தோடு பொதுமக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் சலுகைகளை எக்காரணம் கொண்டும் குறைக்கக்கூடாது என்றார். (ஓ-6)

## நிருபமா ராஜபக்ஷ எம்.பியின் சகோதரர் தன்சானியாவில் கொலை

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிருபமா ராஜபக்ஷவின் சகோதரர் ஷாம்லால் ராஜபக்ஷ, தன்சானியாவில் கொலை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர் தங்கியிருந்த வளாகத்தில் அவருக்கும் வேறு சிலருக்கும் இடையில் இடம்பெற்ற தகராறு ஒன்றின் போதே அவர் கொல்லப்பட்டுள்ளார் என்று இணையத்தள தகவல்கள் குறிப்பிட் டுள்ளன.

ஷாம் லால் ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியார் பிரசாந்தி ஆகியோர் தன்சானியாவில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர் என தெரிய வருகிறது. (ஓ-6)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில்
22-02-1942



விண்ணில்
16-07-2009

### அமரர் திருமதி சி.திருஞானசுந்தரம் (சின்னமணி)

எங்கள் இல்லத்தின் ஒளிவிளக்காய் நின்று ஒளி தந்த
அன்புக்கும் அமைதிக்கும் உறைவிடமான அன்னையே
பாசத்தின் வடிவமதாய் பார்த்திருந்த தாயே!

நம் தேசம் விட்டுப் போய்விடுமா?
நீங்கள் பெற்ற ஐவரும் இங்கு கண்ணீரில்
நீங்களோ விண்ணில் சுதந்திரமாய் உலா வருகின்றீர்கள்
எங்கள் உயிரும்,உணர்வும் இருக்கும் வரையில் எம்முடன் வாழ்வீர்கள்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 15.08.2009 சனிக்கிழமை காலை 6 மணிக்கு தென்புலோலி பெரிய தெய்வம் ஆலய அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து வீட்டில் நடைபெறவிருக்கும் சபீண்டிகரண நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சோழகிணற்றடி
புலோலி கிழக்கு
புலோலி.
தொலைபேசி இல: 060 2219306

குடும்பத்தினர்


(C-2871/இ-32)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

111

பெண்கள் அடம்பிடிப்பவர்கள். விட்டுக் கொடுத்தால் வீட்டுக்குதவாதவர்கள். ஆகவே அவர்களுக்கு அடியைப் போல அண்ணன் தம்பி உதவாது. எதையும் செய்யமாட்டார்கள். பெண்கள் இத்தகைய கொடுமைக்கு



ஆளாகும் போதெல்லாம் முறையிடுவார்கள். ஆனாலும் பொறுமை காத்து பிடி கொடுக்கிறார்கள்.

லூவோ பெண்கள் குடும்ப பாரத்தை மிகவும் துன்பத்தின் மத்தியில் தான் சுமந்தார்கள்.

மீனுக்கு நீந்தத்தான் முடியும். அது பறக்க விரும்பினால் என்ன ஆகும்? மீண்டும் கடலில் வீழ்ந்து மற்றைய மீன்களைப் போன்று நீந்த வேண்டியதுதான்.

இன்று பாட்டி யுவதியாக இருந்தால் இவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்ள மாட்டாள். தன் உணர்வுகளுக்கு வழிகொடுத்து காதல் பண்ணியிருப்பாள்.

ஆனால் அன்று அவள் வளர்க்கப்பட்ட உலகம் வேறு. அவள் கண்ட உலகம் தான் அவள் அறிந்ததும். காணாத ஒன்று பற்றிய எதுவும் அவள் மனதைப் பாதிக்காதல்லவா? என்று முடித்தாள் பாட்டி.

பாட்டி கூறிய அனைத்திலும் ஏதோ சில ஞானம் பொதிந்து தானிருந்தது. வேறுபட்ட காலம் இடமாகியவற்றில் நடந்தேறிய வாழ்வு நாடகம் அது.

ஒபாமா ஒன் யாங்கோ பற்றி உயர்ந்த கருத்துக் களைக் கொண்டிருந்தார். அவர் அதிகார மும் கொடுமையும் களைந்தவராக இருப்பி னும், சுதந்திர சிந்தனையுள்ளவராக மக்கள் விரும் பும் மனிதனாக, வெள்ளைக்காரர்களின் அதிகாரத் தனத்தை எதிர்ப்பவராக இருப்பார் என்று தான் எண்ணினார்.

ஒபாமாவின் தாத்தாவுக்கு தன் மகன் பரக் ஹுசையின் ஆன் டன்ஹம்மை மணந்தால் ஒபாமாவின் இரத்தம் கலப்படம் அடைந்து விடும் என்று எழுதியிருந்தது, அவரின் அசைக்க முடியாத இஸ்லாமிய மதச்சார்பு, இவையெல்லாம் பாட்டி கூறியவற்றால் குழம்பிவிட்டன.

உண்மையில் அவர் அப்படியான தீவிரம் உள்ள இலட்சியவாதியல்ல என்று முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

ஒபாமா 'தன் தாத்தா வெள்ளையர்கள் பற்றி என்ன அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தார்' என்று பாட்டியிடம் கேட்டார். அப்போது தான் பாட்டி தன் கதையை மீண்டும் தொடர்ந்தாள்.

தாத்தா என்ன எண்ணினார் என்பது அவளுக்குத் தெரியாது. காரணம் அவர் யாரும் தன்னை நெருங்கிப் பழகி அறிந்து கொள்ள இடமளிக்கவில்லை.

வெள்ளையர்கள் பற்றி அவர் கொண்டிருந்த கருத்தை யாரும் அறிய முடியவில்லை. ஒருநாள் ஒன்று சொல்வார். மறுநாள் வேறு

## ஆபிரிக்கர்களின் தோல் தடித்தது அடிபோட்டால்தான் அலுவல் நடக்கும்

ஒன்று சொல்வார். வெள்ளைக்காரர்கள் மீது அவருக்கு மரியாதை இருந்தது.

அதற்குக் காரணம் அவர்களின் ஆதிக்கம், இயந்திரங்கள், ஆயுதங்கள், தங்கள் வாழ்க்கையை அவர்கள் திட்டமிட்டு அமைத்துக் கொள்கின்ற விதம் எனலாம்.

வெள்ளைக்காரர்கள் தங்கள் வாழ்க்கையை நாளும் செப்பனிடுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

ஆனால் ஆபிரிக்கர்களோ புதியன புகுதலைக் கண்டு சந்தேகம் கொள்கின்றனர் என்பார். ஆபிரிக்கன் தோல் தடித்தவன். உணர்ச்சி உறைந்து விட்டிருக்கும். அவனைக் கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்றால் அவ னுக்கு அடி போட்டால் தான் அசைவான்.

இவ்வாறு அவர் கூறிய போதிலும் ஆபிரிக்கர்களிலும் பார்க்க வெள்ளை யர்கள் மேலானவர்கள் என்று எண் ணியதில்லை.

அவர்களின் வாழ்க்கை முறையை, பழக்க வழக்கங்களை உண்மையில் அவர் மதித்ததில்லை.

அவர்களின் போக்கு பல விடயங்க ளில் முட்டாள் தனமானவை அல்லது அநீதியானவை என்று தான் எண்ணினார். எந்தவொரு வெள்ளையனும் தன்னில் கை வைத்து அடிக்க விடமாட்டார். அதன் காரணமாக நல்ல தொழில்களை இழந்துள்ளார்.

தன் எஜமானன் தன் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தால் வேலையை உதறித் தள்ளி விட்டுச் சென்று விடுவார். ஒரு முறை

### ஜம்பொன்

எஜமானன் அவருக்கு பிரம்படி கொடுக்க எத்தனித்த போது அந்தப் பிரம்பைப் பறித்தெடுத்து அவனையே நொருக்கி விட்டார். இதற்காக அவர் கைது செய்யப்பட்டார். அவர் கொடுத்த விளக்கத்தையேற்ற அதிகார வர்க்கம் எச்சரித்து தண்டம் விதித்தது.

(தொடரும்)

ஒருவன் தனக்கு தேவையில்லாததை-விலை கொடுத்து வாங்கினால்-அவன் தன் பணத்தை தானே திருடுவதாகும். -சுவீடன்

வலம்புரி

## கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்த மாணவர்களுக்குத் தடை விதிக்க வேண்டும்

பொதுவில் தொலைபேசிப் பாவனை மனித நேரத்தை காவுகொள்கின்றது. இது யாழ். குடாநாட்டில் வேகமெடுத்துள்ளதெனலாம்.

நம்மவர்கள் வெளிநாடுகளில் வாழ்வதும் இதில் கணிசமான பங்கையாற்றியிருந்தாலும், தொலைபேசிக்கு முன் குந்தியிருந்து மணித்தியாலக்கணக்கில் பேசுவது சின்னத்திரையை பார்ப்பது போன்ற பொழுது போக்காகிவிட்டது.

இதனால் ஏற்படக்கூடிய பணச்செலவு என்பதற்கப்பால் குடும்ப ஒருமைப்பாடு பாதிப்படையும் சந்தர்ப்பங்களும் உண்டு.

எனவே அதீத தொலைபேசிப் பாவனையைக் கட்டுப்படுத்தும் பொறுப்பை பெற்றோர் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதற்கு மேலாக மாணவர்கள் கையடக்கத் தொலைபேசியை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகச் சட்டம் கொண்டுவரப்படுவது கட்டாயமானதாகும்.

தேசியரீதியில் இதனைச் சட்டமாக்குவது உடனடிச் சாத்தியம் இல்லையென்பதால் யாழ். மாவட்டத்தின் நீதிபரிபாலனத்துக்கு இருக்கக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டு, மாணவர்கள் எவரும் கையடக்கத் தொலைபேசியை எடுத்துச் செல்வது, தம்முடன் வைத்திருப்பது குற்றம் என பிரகடனம் செய்யவேண்டும்.

மாணவர்கள் பாடசாலைக்குள் கையடக்கத் தொலைபேசிகளை வைத்திருக்கக் கூடாதென சுற்று நிருபங்கள் தெரிவித்தாலும் ஒட்டுமொத்தத்தில் மாணவர்கள் அல்லது அந்த வயதினர் எவரும் கையடக்கத் தொலைபேசிப் பாவனைக்குள் பிரவேசிப்பதை தடுப்பது அவசரமான விடயமாகும்.

கையடக்கத் தொலைபேசிகளின் நவீனப்பாடுகள், புகைப்படம் எடுக்கும் வசதிகள், படங்களையும், செய்திகளையும் கையடக்கத் தொலைபேசியிலிருந்து கையடக்கத் தொலைபேசிக்கு அனுப்பும் ஏற்பாடுகள் என்பன விரசமான நடவடிக்கைகளில் மாணவர்களைத் தூண்டுகின்றது.

இங்கு மாணவர்கள் என்ற எல்லைப்படுத்தலில் உயர்தர மாணவர்களே! உச்ச எல்லையினர் என்ற நினைப்பு தவறானது. இருபத்தொரு வயதுக்குட்பட்ட எவரும் மாணவ வயதினர் என்ற அடிப்படையில் அந்த வயதினரிடம் கையடக்கத் தொலைபேசி பாவனைக்கு தடைவிதிக்க வேண்டும்.

இதற்கு மேலாக மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்கள் தலைக்கவசம் அணிகிறார்களா? வரி மற்றும் காப்புறுதிச் சான்றிதழ் வைத்திருக்கின்றார்களா? என துருவித்துருவி ஆராயும் பொலிஸார் கையடக்கத் தொலைபேசியில் கதைத்துக்கொண்டு வாகனம்செலுத்து பவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்.

இவையனைத்தும் கையடக்கத் தொலைபேசிக்கு எதிரானவையல்ல. மாறாக எங்கள் தமிழ்ப் பண்பாடு, இறுக்கமான கலாசாரப் பின்னணிகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தொடர்பில் நிம்மதியான-மகிழ்வான வாழ்வை பெற வேண்டும் என்ற உயரிய நோக்கிலேயே இக்கருத்தியல் இங்கு முன்வைக்கப்படுகின்றது.

# வவுனியாவில் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றதன் மூலம் ஜனநாயகம் வெளிக்காட்டப்பட்டுள்ளது

## சுசில் பிரேம்ஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியா நகர சபைத்தேர்லில் தமிழரசுக்கட்சி வெற்றி பெற்றுள்ளதன் மூலம் வடபகுதி மக்களுக்கு அரசாங்கம் ஜனநாயகத்தை வழங்கியுள்ளது என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபைத்தேர்தலில் நூற் றுக்கு 50 வீத மக்கள் அரசாங்கத்தை ஆதரித்துள்ளதோடு ஐ.தே. கட்சியை நிராகரித்துள்ளன என்று ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிறேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது யாழ். குடாநாட்டில் பதிவு செய்யப்பட்ட வாக்குகள் ஒரு இலட்சம் இருந்த போதிலும் பெரும்பாலானோர் அங்கு வசிக்கவில்லை. வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ளனர்.

அத்தோடு வெவ்வேறு பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இதனால் பெரும்பாலான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலும் எமக்கு மக்கள் வாக்களித்துள்ளனர். அத்தோடு ஐ.தே கட்சிக்கு வெறுமனே 83 வாக்குகளே கிடைத்துள்ளன.

வவுனியாவிலும்230 வாக்கு களே கிடைத்துள்ளன. அந்தளவிற்கு தமிழ் மக்கள் ஐ.தே. கட்சியை நிராகரித்துள் ளன.

பயங்கரவாதம் காரணமாக கடந்த காலங்களில் அதிக குண்டு வெடிப்புகள் இடம்பெற்றுள்ள மாவட்டம் வவுனியா ஆகும். இன்று பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் வவுனியாவில் நடத்தப்பட்ட தேர்தலில் தமிழரசுக்கட்சி வெற்றி பெற்றுள்ளது. இது மகிழ்ச்சி அளிக்கின்றது.

ஏனெனில் இந்த மக்களுக்கு ஜனநாயகத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் வழங்கியுள்ளமை இதனால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளதோடு வடபகுதி மக்களுக்கு ஜனநாயகம்வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தியும் சர்வதேசத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றார். (ஓ-6)

# எந்தத் தேர்தலானாலும் அரசாங்கம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெறும்

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலோ அல்லது பொதுத்தேர்தலோ நடத்தப்பட்டால் அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும் பாண்மையினைப்பெற்று ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் என்று ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரி பால ஶ்ரீ சேன தெரிவித்தார்.

கொழும்பு -மகாவலி நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அவர் மேலும்தெரிவித்ததாவது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், ஊ வா மாகாண சபை தேர்தலில் அமோக வெற்றி பெற்றது.

இதற்கு யுத்த வெற்றி மட்டுமே காரணம் அல்ல . முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களும்காரணமாகும்.

ஆனால் எதிர்க்கட்சி சம்பிரதாய பூர்வமான குற்றச்சாட்டுக்களை அரசு மீது சுமத்திக்கொண்டிருக்கின்றதே தவிர தனது தோல்விக்கு என்ன காரணம் என்பதை ஆராயவில்லை.

தற்போதைய அரசியல் அமைப்பின் காரணமாக தேர்தல்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற முடியாததென்ற விவாதம் இருந்த போதும் நடந்து முடிந்த ஊவா மாகாண சபைத்தேர்தலில் இப்பெரும் பான்மையைப் பெற்றுள்ளோம்.

இதற்கு மக்கள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையே காரணமாகும் . இந்த மக்கள் நம்பிக்கை இன்று எம்மோடு பின்னிப் பிணைந்துள்ளது இதனை எவராலும் தகர்க்கமுடியாது. எனவே ஜனாதிபதித்தேர்தலோ அல்லது பொதுத்தேர்தலோ நடத்தப்பட்டால் அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் வெற்றி ஈட்டுவது நிச்சயம் என்றார். (ஓ-6)

# நாணய நிதிய கடன் குறித்த விவாதத்துக்கு அரசு இணக்கம்

## செவ்வாயன்று முழுநாள் விவாதம் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கை அரசாங்கம் பெற்றுக் கொண் டுள்ள கடனுதவி தொடர்பில் பாராளுமன்றத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முழுநாள் விவாதம் நடத்தப்படவிருக்கின்றது. இந்த விவாதம் அன்றைய தினம் பாராளுமன்றத்தின் பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் சபை ஒத்திவைப்பு வேளை விவாதமாகவே நடத்தப்படவிருக்கின்றது.

சபை ஒத்திவைப்பு வேளை பிரேர ணையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டு வரப்படவிருப்பதாகவும் விவாதத்தை மாலை 6 மணி வரையும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டி ருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கடந்த வாரம் நடைபெற்ற கட்சி தலைவர்கள் கூட்டத்தில் ஆராயப்பட்ட தாகவும் அடுத்த கூட்டத்தில் இறுதி முடிவு எட்டப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகியன விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி தொடர்பில் விவாதம் நடத்துவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத் திடம் பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்களில் எவ்விதமான இரகசியமும் இல்லை என்று சுட்டிக் காட்டிய அமைச்சர் ரங்சித் சியம்பலாப் பிட்டிய பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்கள் மற்றும் சகல ஆவணங்களையும் அவர் கடந்த 6 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்தியிருந்தார்.

சர்வதேச நாணய நிதியத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடனுதவியினால் பொது மக் களை பாதிக்கும் வகையில் எவ்விதமான வரியும் அதிகரிக்கப்படமாட்டாது என்று சுட்டிக் காட்டிய அவர் 2011 ஆம் ஆண்டில் வரி ஆதாயம் 2 சதவீதத்தினால் அதிகரிக்கும் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக் கதாகும். (ஓ-6)

# வெள்ளி நற்சிந்தனை 84

# பக்தியின் மொழி தமிழ்

ஒருவருடைய பெருமுயற்சியால் விளைந்த விளை பொருளை இன்னொருவர் வந்து கவர்ந்து செல்வது ஓர் அடாத செயலாகும். பகலிரவாகப் பாடுபட்ட ஒருவர் தன் விளை புனத்திலே முற்றி விளையும் தினைப்பயிரை பாதுகாக்க இளம் பெண்களை நியமிக்கும் வழக்கம் முன்னர் இருந்தது. பருவம் அடைந்த பெண்கள் பண்டைக் காலத்தில் திருமணம் ஆகும் வரை வீட்டைவிட்டு வெளியே செல்வதில்லை. இதனால் இப்பருவம் இல்லிகவாப் பருவம் என்றே அழைக்கப்பட்டது. ஆனால் மலைப் பிரதேசத்திலே வாழும் மக்கள் வாழ்வியலில் இல்லிகவாப்பருவத்துப் பெண்களைத் தினைப்புனத்துக் காவற்பணிக்கு அனுப்பும் வழக்கம் இருந்துள்ளது. சுந்தரர் பாடிய தேவாரத்தில் இப்பெண்களின் பணியைச் சிறப்பாகக் குறிப்பிட்டு பாடியுள்ளர்.

சீபர்பத மலைப்பிரதேசத்தில் தினைப்புனத்தில் தினை நன்கு செழித்து வளர்ந்து கதிரைத்தள்ளி நிற்கிறது. அந்த முற்றிய தினைக் கதிரைப் பாதுகாப்பதற்கு இளம்பெண்கள் தினைப் புனத்திலே பரண்கட்டி அதன் மேல் நின்று காவல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஏமாற்றி விட்டு பச்சைக் கிளிகள் பறந்து வந்து தினைக் கதிரைக் கொய்து உண்கின்றன. பெண்கள் அதைக் கவனிக்கவில்லை என எண்ணிக் கிளிகள் மீண்டும் வந்து கதிரை உண்கின்றன. அதைக் கண்ட இளம் பெண் ஒருத்திக்குச் சினம் உண்டாகின்றது. அவள் கிளிகளைப்பார்த்துச் சொல்கிறாள் "அப்போது வந்து கதிரைக் கொய்து உண்ஙள்கள் நான் உங்களை அழையாது பேசாமலிருந்தேன். ஆனால் நீங்கள் மீண்டும் மீண்டும் வந்து உண்டால் எம்முடைய சுற்றத்தவர்கள் எம்மைக் கடிந்து பேசுவார்கள் இப்போது இவ்வாறு கவர்ந்து உண்பது தானோ உங்கள் தொழில்" என்று கிளிகளை ஓடஓட விரட்டுகின்றாள். கவண் கல்லினால் அடித்து விரட்டுகின்றாள்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இப்பாடலில் தாய்மையின் பரிவைச் சுந்தரர் காட்டியுள்ளார். பசியால் உணவைத் தேடி வந்த கிளிகளை ஒரு முறை உண்ப தற்கு அனுமதித்தமை இதனை நன்கு உணர்த்தியுள்ளது. ஆனால் தாய்மை , கண்டிப்பு நிலையையில் ஒரு தவறை மீண்டும் செய்ய அனுமதிக்காது. அப்படிச்செய்யின் உரிய தண்ட னையை வழங்கும். இங்கே.இளம் பெண்ணாக இருந்த போதும் இயற்கையின் தன்னிகரற்ற தாய்மை என்னும் கொடை பெற்ற பெண் என்பதால் அவள் கிளியைத் தண்டிக்க முற்படுகின்றாள். "செப் பேந்திய இள முலையாள் " என்றதொடரால் இளம் பெண் என்பதைப் புலப்படுத்தியுள்ளார்.

உலகியல் வாழ்வில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த சுந் தரருக்கு சீபர்பத மலையிலே காணும் இயற்கைக் காட்சிகள் வாழ் வியல் அனுபவத்தை விளக்கு வதாகவுள்ளன. இதனால் இறைவனைப் பற்றிப் பாடும் பதிகத்தில் எட்டுப் பாடல்களில் இயற்கைக்காட்சிகளைப் பாடியுள்ளார். இயற்கையிலே இறை அருள் காண்கிறார்.

"அப்போது வந்து உண்ஙள்களுக்கு அழையாது முன்னிருந்தேன்
எப்போதும் வந்துண்டால் எமர்கள் சுழியாரோ
இப்போது உமக்கு இதுவோ தொழிலென்று ஓடியக் கிளியை
செப்பேந்திள முலையாள் எறி சீபர் பதமலையே"

# தென்மாகாண சபைத் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகலாம்

(கொழும்பு)

ஆறாவது பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் நிறைவடையவிருக்கின்ற நிலையில் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக ஜனவரி மாதமளவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

தென்மாகாணசபைக்கான தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்படலாம் என்றும் அந்த வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலையா? அல்லது பாராளுமன்ற தேர்தலையா? முதலில் நடத்துவது என்பது தொடர்பில் அண்மையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் குழுக் கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந் நிலையிலேயே ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு முதலில் விடுக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆறாவது பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் திகதியும் ஜனாதிபதியின் பதவிக்காலம் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ஆம் திகதியும் நிறைவடைகின்றது.

தென்மாகாண சபைத் தேர்தல் நிறைவடைந்ததன்பின்னர் ஜனாதிபதி தேர்லுக்கான அற்றிவிப்பு விடுக்கப்படலாம் என்றும் ஜனாதிபதி தேர்தலுடன் ஆறாவது பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என்றும் தெிவிக்கப்படுகின்றது. இதேவேளை எதிர்கட்சி தலைவர் கோருகின்ற எந்தவொரு தேர்தலையும் நடத்து வதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாக அலரி மாளிகையில் அண்மையில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஓ-6)




வடமராட்சி வடக்கு கற்கோவளம்

## அருள்மிகு ஸ்ரீ கும்பி முருகன் தேவஸ்தானம்

## வருடாந்த அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் - 2009

**முருகப் பெருமான் மெய்யடியார்களே!**

ஆலய வருடாந்த உற்சவம் நிகழும் விரோதி வருடம் ஆடித்திங்கள் 29ஆம் நாள் வெள்ளிக்கிழமை (14.08.2009) துவஜாரோகணத்துடன் கொடியேற்றம் ஆரம்பமாகி ஆவணி ஞாயிறு 07ஆம் நாள் அத்தநட்சத்திரம் சுவடிய சுபமுகூர்த்தத்தன்று 23.08.2009 வரையுள்ள பத்துத்தினங்கள் மிக பக்திப்பரவசத்துடன் வெகு விமரிசையாக நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

**விழா விபரம்**

**கொடியேற்றம் 14.08.2009 வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணி**
**சப்பறத்திருவிழா 20.08.2009 வியாழக்கிழமை பி.ப.3.30 மணி**
**தேர்த்திருவிழா 22.08.2009 சனிக்கிழமை பி.ப.3.30 மணி**
**தீர்த்தோற்சவம்**
**அஷ்டோத்திர சங்காபிஷேகம் 23.08.2009 ஞாயிறு மு.ப. 6.00மணி**
**பூங்காவனம் 24.08.2009 திங்கட்கிழமை பி.ப.3.30 மணி**

குறிப்பு :-தினமும் பிற்பகல் 3.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி மாலை 5.30 மணிக்கு திருவிழா நிறைவுபெறும்.

அலங்கார உற்சவ பிரதமகுரு :- சிவஸ்ரீ. வை.சிவராஜா குருக்கள்
சிவஸ்ரீ.தியாகராஜ சோமஸ்கந்தராஜக்குருக்கள்
உதவிக் குருக்கள்:- சிவஸ்ரீ.இராமலிங்க சுந்தரலிங்கக் குருக்கள்
ஆலயப் பிரதம குரு:- சிவஸ்ரீ சோ. தனஸ்சய ஐயர்
சிவஸ்ரீ.ச.கோகுலன் குரு
சாத்துப்படி:- சிவஸ்ரீ ரங்கேஸ்வரன் ஐயர்
உற்சவகால சிறப்பு: தவில் நாதஸ்வரம்
*நெல்லியடி செல்வராசா குழுவினர்.*

ஒலி,ஒளி:
*கௌசி சவுண்ட்*

முருகப்பெருமான் அடியார்கள் அனைவரும் திரண்டு வந்து அவன் திருவருள் தினமும் பெறுக.

இங்ஙனம்
அறங்காவலர் சபை,
அலங்கார உற்சவகால உபயகாரர்கள்.


# விலங்கு விசர்நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கை

செப்ரெம்பர் 28ஆம் திகதி உலக விலங்கு விசர் நோய் தினத்தினை முன்னிட்டு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையால் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உள்ள சகல வளர்ப்பு நாய்களுக்கும் ஏ.ஆர்.வி. தடை ஊசி போடுதல், கட்டாக் காலி நாய்களின் பெருக்கத்தைக் குறைப்பதற்கு கால்நடை வைத்தியர்களின் அனுசரணையுடன் இலவச கருத்தடை சிகிச்சை போன்றன இடம்பெறவுள்ளது.

இதில் இன்றும் நாளையும் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட இணுவில் பொது சுகாதாரப் பகுதியிலும் இன்று யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட வண்ணார் பண்ணை பொது சுகாதாரப் பகுதியிலும் ஏ.ஆர்.வி. மற்றும் கருத்தடை ஊசி ஏற்றப்படவுள்ளது.

அத்துடன் நாளை மறுதினம் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட ஊர்காவற்றுறை , வேலணை பொது சுகாதார பரிசோதகர் பகுதியில் இலவச கருத்தடை சத்திர சிகிச்சையும் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய பிரிவிற்குட்பட்ட நெடுந்தீவு பொது சுகாதார பரிசோதகர் பகுதியில் இன்று தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஏ.ஆர்.வி. மற்றும் கருத்தடை ஊசி என்பன ஏற்றப்படவுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

### ஏ-9 பாதையினூடாக

# அரச வாகனங்களில் பயணிக்க முன் அனுமதி பெறவேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச அதிகாரிகள் தமது கடமையின் நிமித்தம் பிற மாவட்டங்களுக்கு அர்ச வாக னங்களில் ஏ-9 பாதையூடாக செல்வதாயின் முன் அனு மதி பெறவேண்டும் என வட மாகாண ஆளுநர் மேஜர் ஜனரல் ஜி.ஏ.சந்திர சிறி தெரிவித்துள்ளார்.

தாம் செல்வதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு வட மாகாண ஆளுநரின் அலுவலகத்திற்கு கடிதம் மூலம் அறிவித்தால் ஏ-9 பாதையூடாக செல்வதற்கான அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கூட்டங்கள் , கலந்துரையாடல்களுக்காக பிற மாவட்டங்களுக்குச் செல்லும் அரச அதிகாரிகள் தாமதமாகச் செல் வதை கருத்தில் கொண்டே இவ் அனுமதியை வழங்கத் தீர்மானித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. (ச)




# உடனடி வேலைவாய்ப்பு

இலங்கைக் காப்புறுதி வரலாற்றில் கடந்த 22 வருடங்களாகச் சிறப்பான வாடிக்கையாளர் சேவையினை வழங்கிவரும் "யூனியன் அஷ்யூரன்ஸ்" வடமராட்சி வாழ் மக்களுக்கு சிறப்பான சேவையினை வழங்குவதற்காக

## "வடமராட்சியில் தனது கிளையை ஆரம்பிக்கின்றது"

இதற்காக 18 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

## பதவி வெற்றிடங்கள்

*1.காப்புறுதி ஆலோசகர் - தனி (வெற்றிப்பாதை I )*
*2.தனிநிதி ஆலோசகர் - தனி (வெற்றிப்பாதை I)*
*3.முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் - குழு (வெற்றிப்பாதை II)*
*4.உதவி அபிவிருத்தி முகாமையாளர் - குழு (வெற்றிப்பாதை II)*



தகுதி உடையவர்கள் தமது சிறப்பான வேலைச் செயற்திட்டத்தின் (Acheifment) மூலம் குறுகிய காலப்பகுதியில் பின்வருமாறு தமது பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்ளலா

தனி வெற்றிப்பாதை I
- காப்புறுதி ஆலோசகர்
- தனி நிதி ஆலோசகர்
- நிதி ஆலோசகர்
- தனி நிதி முகாமையாளர்
- சிரேஷ்ட நிதிமுகாமையாளர்

குழு (Team Leader)
வெற்றிப்பாதை II
- முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
- உதவி முகவர் அபிவிருத்தி முகாமையாளர்
- முகவர் அபிவிருத்தி முகாமையாளர்
- சிரேஷ்ட அபிவிருத்தி முகாமையாளர்



தகைமை-1.க.பொ.த(சா/த) 6 பாடங்கள் சித்தி (கணிதம் உட்பட -பதவி 1,2)
2.க.பொ.த(உ/த) 3 பாடங்கள் சித்தி (பதவி 3,4).

Note- I.வேறு துறையில் வேலைசெய்பவர்கள் or ஓய்வு பெற்றவர்கள் பகுதி நேரமாக (பதவி இல: 01 இல் )தொழில்புரிய முடியும்.
II.பரீட்சை எழுதும் A/L மாணவர்களுக்குரிய விசேட வேலை வாய்ப்பிற்கான விபரம் பரீட்சை முடிவடைந்ததன் பின்னர் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

நன்மைகள்-1. வரையறுக்கப்படாத ஊதியம்
2. திறமைக்கேற்ப விரைவான பதவி உயர்வு.
3. வருடாந்த விருதுகளை வெல்லும் வாய்ப்பு.
4. இலவச வெளிநாட்டுச் சுற்றுலா.
5. இலவச ஆயுட் காப்புறுதி வசதி.
6. காப்புறுதி நிறுவகத்தால்(SLII) நடாத்தப்படும் தொழிற்சான்றினைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு

**நேர்முகத் தேர்வு**

காலம்:- 17.08.2009 திங்கட்கிழமை நேரம் :- முற்பகல் 9.30

இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ் ( இராகுலசூரியர் கட்டடத் தொகுதி) பிரதான வீதி, பருத்தித்துறை.(வேலாயுதம் மகாவித்தியாலயம் அருகில்)

**தோற்றுங்கள் நேர்முகத் தேர்விற்கு சுயவிபரக் கோவையுடன் உறுதியான விடா முயற்சியினால் உங்கள் வெற்றிப்பாதையைத் தீர்மானியுங்கள்**

(3233)

தொடர்புகளுக்கு 021-222 3753
077 6564643

T. குபேந்திரன்
அபிவிருத்தி முகாமையாளர்

## வன்னியில் பாரிய...

எட்வான்ஸ் மென் ஒப் சயன்ஸ் என்ற அமெரிக்க நிறுவனமொன்றே இந்த செய்ம்மதி படங் களை எடுத்துள்ளதாக மன்னிப்புச்சபை குறிப்பிட்டுள்ளது.

புதிய செய்ம்மதி படங்களின் அடிப்படையில் அரசாங்கம் பொது மக்களுக்காக அறிவித்த பாது காப்பு வலயங்களை சுற்றி 17 மோட்டார் தளங்கள் உள்ளதையும் காண முடிகின்றது.

இந்த நிலையில் இலங்கை படையினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பொதுமக்களை மனித கேடயங்களாக பயன்டுத்தியமை தெரிய வந்துள்ளதாக மன்னிப்புச் சபையின் அலுவலரான கிறிஸ்டோப் கோடெல் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த தகவல்களின் அடிப்படையில் வன்னியில் யுத்தம் இடம்பெற்ற இறுதி கட்டத்தில் பொதுமக்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார். எனினும் இந்த குற்றச்சாட்டை இலங்கையின் பாதுகாப்பு பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல உண்மைக்கு புறம் பானதென குறிப்பிட்டுள்ளார்.

(ச-5)

## புதுக்குடி...

வினர் மேற்கொண்ட தேடுதல்களின் போதே மேற்படி ஆயுதங்களை மீட்டெடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இராணுவத்தின் எட்டாவது அதிரடிப் படையினர் புதுக்குடியிருப்பின் ஐந்து பிரதேசங்களில் தேடுதல்களை மேற்கொண்ட போது; ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் 6 பெட்டிகள், தேசிய அடையாள அட்டைகள் - 29, ரெலோ அடையாள அட்டை -1, புலிகளின் அடையாள அட்டை -2, பல்வேறு வகையான துப்பாக்கி ரவைகள் -1700 கையடக்க தொலைபேசிகள்-07 இத்தற்கு பயன்படுத்தும் உபகரணங்கள், கைக்குண்டுகள்-04 மற்றும் படகுகளுக்கும் பொருத்தப்படும் வெளி இணைப்பு இயந்திரங்கள்-04 என்பவற்றைபடையினர் மீட்டெடுத்துள்ளனர்.

## ஐ.நா...

முன்னதாக கோஹன நியூயோர்க் செல்லவுள்ளார்.

கோஹன இதற்கு முன்னரும் ஐக்கிய நாடுகள் சபையில் பணியாற்றியுள்ளார். அப்போது சபையின் அனைத்துலக ஒப்பந்தங்களுக்கான பிரி வின் தலைவராக இருந்தார். இவரது காலத்திலேயே அந்தப் பிரிவு முழுவதுமாகக் கணனி மயப்படுத்தப்பட்டது. (ச-5)

## அரசியல் கட்சித் திருத்த...

இந்த திருத்தச்சட்ட மூலம் நாடாளுமன்றத்தின் முதல் வாசிப்புக்கு விடப்பட்டிருந்த நிலையில் அதில் உள்ள ஏற்பாடுகள் நாட்டின் அரசியலமைப்புக்கும் சர்வதேச சட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளுக்கும் முரணாக அமைந்துள்ளமையை சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சில அரசியல் கட்சிகள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தன.

இதற்கிடையில் சிறுபான்மை மக்களின் நலன்களை இந்த சட்டமூலத்தினால் மீறப்படும் என்பதை நாடாளுமன்ற தெரிவுக் குழு கூட்டத்தில் பங்குகொண்ட அரசியல் கட்சிகள் ஏற்றுக் கொண்டுள்ளதாக இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை ஒரே பெயரில் பல கட்சிகள் அல்லது ஒரு கட்சியில் பல பிரிவுகள் இருப்பதை இல்லாமல் செய்வதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. சிறுபான்மைக் கட்சிகளுக்கு எதிரான கட்சிகளுக்கு இச் சட்டமூலத்திற்கு; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் கொடுத்த அழுத்தம் காரணமாக புதிய சட்ட மூலத்தில் திருத்தம் கொண்டுவர இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இன, மத, சமூகப் பெயர்களில் இயங்கும் கட்சிகளின் அங்கீகாரத்தை இரத்துச் செய்ய வகை செய்யும் நாடாளுமன்றத் தேர்தல் சட்டமூலத்தை ஆட்சேபித்து ஐ.தே.க. , த.தே.கூ. என்பன உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளன.(ச-3,5)

## ஜனாதிபதி...

சேவைக்கால ஆலோசகர்கள் மற்றும் தரம் 5 கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி பட்டறை ஒன்றை நடத்துவதற்கு இளைஞர்களுக்கான எதிர்காலம் அமைப்பைச் சேர்ந்த தேசப்பிரிய இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளார். (ச-5)

## புலம்பெயர் தமிழ்ச்...

றொபேர்ட் ஓ பிளேக்கும் ஜேம்ஸ் மூரேயும் மகிழ்ச்சி தெரிவித்தனர். இந்த ஆண்டில் இலங்கைக்கு 56 இலட்சம் டொலர் பெறுமதியான உதவிகளை அமெரிக்கா வழங்கியுள்ளது. தமிழ் மக்கள் உள்ள நலன்புரி முகாம்களில் நிலவும் நெருக்கடியைக் குறைத்தது, இடம்பெயர்ந்தவர்களை பதிவுசெய்தது, மனிதாபிமான அமைப்புக்கள் முகாம்களை அணுகுவதற்கான அனுமதியை விரிவுபடுத்தியது போன்ற சிலவற்றை இலங்கை அரசு செய்து இருந்தாலும் இன்னும் செய்ய வேண்டியது எவ்வளவோ இருக்கின்றது என்று பிளேக் மற்றும் மூரே தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாப்பாகவும் விரைவாகவும் தமது இடங்களுக்குத் திரும்ப வேண்டும்,அனைத்துலக மனிதாபிமான அமைப்புக்கள் முகாம்களை அணுகுவதற்கான அனுமதி தொடர்ந்து வழங்கப்பட வேண்டும், தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் நடமாட்ட சுதந்திரத்தை மேம்படுத்துவதற்கு உதவக்கூடிய வகையில் அவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை அமெரிக்கா முன்வைத்துள்ளது.

இலங்கை அரசு கருத்து இணக்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை பிளேக் அழுத்தமாகக் குறிப்பிட்டார். இலங்கையில் நீடித்திருக்கக்கூடிய அமைதியை ஏற்படுத்த வேண்டும், அனைத்துத் தரப்பினர் மத்தியிலும் நீதியையும் பகை மறப்பு நடவடிக்கைகளையும் ஊக்கப்படுத்த வேண்டும்,

அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது தொடர்பில் இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள தமிழர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுக்களை நடத்தவேண்டும், மனித உரிமைகள் விடயத்தில் முன்னேற்றங்களை எட்டவேண்டும் என்றும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. இச்சந்திப்பு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் நடைபெற்றது. கொழும்பில் உள்ள தூதரகத்தில் இருந்து வீடியோ இணையத் தொடர்பு மூலமாக மூரே இதில் கலந்து கொண்டார். (ச-5)

## புதிய தேர்தல் ஒன்றுக்கு...

அதன்படி தனது முதலாவது பதவிக் காலம் முடிபதற்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ராஜபக்ஷ இல்லாது ஒழிக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டி உள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை இல்லாது ஒழிப்பதில் தொடக்கத் தில் இருந்தே ஜே.வி.பி உறுதியாக இருந்து வருகின்றது. 1982 ஆம் ஆண்டில் நடைபெற்ற போதே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை இல்லாது ஒழிக்கும் நோக்குடன் அரசியல்வாதியற்ற ஒருவரை அப்பதவிக்கு நியமிக்க வேண்டும் என தனது கட்சி பரிந்துரை செய்தமையையும் நினைவு கூர்ந்தார்.

1994ஆம் ஆண்டில் சந்திரிகா குமாரதுங்க மூலமும் இதேவிடயத்தை தமது கட்சி வலியுறுத்தியது எனவும் ஆனாலும் அவர் அதில் அக்கறை காட்டவில்லை என்றும் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

நீங்கள் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாமல் மற்றொரு முறை ஜனாதிபதி பதவிக்கு தேர்தல் நடத்துவது நீதியற்றது; முறையற்றது. 2005ஆம் ஆண்டில் இந்த நாட்டின் சார்பில் எம்முடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் இந்தச் செயல் மீறுகின்றது என ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (ச-5)


## விற்பனையாகிறது

தேசிய கல்வி நிறுவனத்தின் ஊடாக பிராந்திய நிலையங்களில் வார இறுதி நாட்களில் நடத்தப்படும் ஆசிரியர் கல்வி பாடநெறிக்கான ஆசிரியர்களைத் தெரிவுசெய்தல்.

2009 - 2011

| | |
|---|---|
| பூபாலசிங்கம் புத்தகசாலை,<br>ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம். | பூபாலசிங்கம் புத்தகசாலை<br>நல்லூர் உற்சவகால சிறப்பு<br>விற்பனை நிலையம், நல்லூர். |

(த-3022)






கொடிய வினை தீர்த்திடும் முருகா
எம்குற்றங்கள் போக்கிடுவாய்
வறிய மக்கள் வாடி வதங்கிடாமல்
வரம் தருவாய்.

**ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன்**
**22 கரட்டில் பெற்றிட நாடுங்கள்.**

**ஆசைப்பிள்ளை அன் சன்**
**நகைமாடம்**
இல. 10, பஸ் நிலையம்,
சங்கானை. (C-2928)

## நியூ சிற்றி ரேடர்ஸ்

சொனி ,சொனிக்கா ,பனசொனிக் ரேடியோக்கள், பனசொனிக், சொனிக்கா கசற் ரெக்கோடர் ,வோக்மன் ,கார் ரேடியோ, ஸ்பீக்கர், சொனி ,பனசொனிக், LG கலர் T.V, ஸ்தியோ, ரிசீவர், சொனி, பனசொனிக் டிஜிற்றல் DVD பிளேயர் ,ஸ்ரப்பிளைஷர் ,கிறைண்டர், சார்ச்சர் லைட் ,றைஸ் குக்கர், சார்ச்சர் ரோச் ,இன்ரெக் (INTEX) வூபர், கொட்பிளேட் ,அயன் மற்றும் எலக்ரோனிக் எலக்ரிக்கல் உதிரிப் பாகங்களை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.

T.P.:- 021 222 3226

**நியூ சிற்றி ரேடர்ஸ்,**
319 A, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

*(இத்தாபனம் ஸ்ரான்லி றோட், K.K.S. றோட் சந்தியில் இருந்து சத்திரச்சந்திப் பக்கமாக K.K.S. றோட்டில் 6-வது கடை)* (C-3018)



கலியுக வரதா
எம் கர்மவினை தீர்த்து
எம்மை நல்வழிப்படுத்திடுவாய்
நல்லையம்பதி முருகா

அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக்
கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்

**ஆசைப்பிள்ளை அன் சன்**
**நகைமாடம்**
இல. 10, பஸ் நிலையம்,
சங்கானை. (C-2928)

## மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்

**யாழ். மண்ணில் மிகக்குறைந்த கட்டணத்தில் வியாபார நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் பனர், ஸ்டிக்கர் ஆகியன வற்றை பிரதியாக்கம் செய்வதற்கு**



**மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்**
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C-3021)

## 1 - வது பிறந்த நாள் வாழ்த்து



“ஸ்ரீ இல்லம்” இமையாணன் கிழக்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த
திரு.திருமதி ரகுபதி கவிப்பிரியா தம்பதிகளின்
செல்வப் புதல்வி
**பவிஷாயினி**
தனது 1 - வது பிறந்த தினத்தை 14.08.2009
வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில்
வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரைப்
பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும்
வாழ்க வாழ்கவென வாழ்த்துவோர்;

அப்பா, அம்மா, அண்ணா, பூட்டப்பா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்துமார், அன்ராமார், மாமாமார், அத்தை.

தகவல்
மாமாமார்
(தீபன், கஜன்)

(3220)

## MANOJ TRAVELS

விசேட விமான சேவை

**நல்லூர்க் கந்தனை தரிசிக்க உங்களுக்குத் திருவருள்**



நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு
விசேட விமான சேவை

**15/08/2009 - 22/08/2009**

யாழிலிருந்து ஒருவழிக்கட்டணம் **4500/=**

கொழும்பிலிருந்து யாழ் வருபவர்களிற்கு
இருவழி கட்டணம் 16900/= ரூபா மட்டுமே.
கொழும்பிலிருந்து ஒரு வழி கட்டணம் 8400/= மட்டுமே



**Manoj Express**
**கொழும்பு, யாழ்ப்பாணம்**

தொடர்புகளுக்கு

கொழும்பு -
No.55, Maning Place
Wellawathai.
0112364964
0772293181

Jaffna -
New Marketing
Jaffna.
0772293183

(C-3012)

## Multi Timber Dealers

**மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கம்பஸ் மரங்களை தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்**

## Multi Timber Dealers

**இப்பொழுது யாழ். நகரிலும் கிளை ஒன்று திறக்கப்பட்டுள்ளது.**

உங்களுக்கு தேவையான சகல அளவுகளிலும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

கிளை:- (117, மானிப்பாய் வீதி (ஐந்துசந்தி) யாழ்ப்பாணம்)
0772612453, 0773866173, 0215100191

தலைமை அலுவலகம் (634/1, நீர்கொழும்பு வீதி மாபொல, வத்தளை.
0773322974, 077807214, 0112981818 (3218)

## கூரியர் சேவை

**ARRUL GLOBAL EXPRESS**

அவசர தேவையின் நிமித்தம்
பொதிகள் மற்றும்
ஆவணங்களை 48 மணி
நேரத்தில் அனுப்பும்
வசதி

T.P : 0212226113
Mail : arrulgex@gmail.com
இல. 01. பிறவுண் வீதி,
நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.

**விசேட சேவை**
லண்டனிலிருந்து மிக விரைவாக
இலத்திரனியல் பொருட்கள் பொதிகள்
மற்றும் ஆவணங்களை
மிக குறைந்த கட்டணத்தில் பெற்றுகொள்ளலாம்.

லண்டன், பிரான்ஸ், கனடா,
சுவிஸ் நாடுகளுக்கான
1 Kg கட்டணம் 550/=
அவுஸ்திரேலியா,
1 Kg கட்டணம் 700/=
(C-2979)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.08.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.